பர்மா-மலாய் 0-1-3 இலங்கை 5 சதம்

TAMIL MANI REGD NO. M. 3384

தமிழ் மணி



எல்லாரு மோர்குலம் எல்லாருமோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

[வாரப் பதிப்பு]

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 4 ஓசை 16 | சென்னை—வெகுதானிய௵ மாசி௴ 15௳ ஞாயிற்றுக்கிழமை (26—2—39) | விலை அரையணா

-: வீரத் தாய் :-

இயந்திர பீரங்கி, வெடி குண்டுகளால் இந்தியரைப் பயமுறுத்திவிடலாமென வெள்ளையரும் சமஸ்தான மன்னர்களும் நினைக்கிறார்கள். அந்தப் பூச்சாண்டிக்கு இந்தியர் பயந்தவர்களல்ல; இந்தியப் பெண்மணிகளும் அஞ்சி யிருக்கவில்லை. இந்தியப் பெண்மணிகளின் வீரத்துக்கு அறிகுறியாக, வீரத்தாய் கஸ்தூரிபாய் காந்தி, ராஜகோட் போறப்பாட்சிப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைசென்றிருக்கிறார். அன்னை கஸ்தூரி தேவியைப் பின்பற்றி இன்னம் பல வீரப் பெண்மணிகள் சிறை சென்றிருக்கிறார்கள்; பலர் சிறைசெல்லக் காத்திருக்கிறார்கள். ஐக்ய மாகாண ஸ்தல ஸ்தாபன மந்திரியும், பண்டித ஜவார்லாலின் சகோதரியுமான தேவி விஜயலக்ஷ்மி பண்டிட்கூட ராஜகோட் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடத் தயாராக இருக்கிறாரென்றால், இந்தியப் பெண்மணிகளின் வீரத்திற்கும், தியாகத்திற்கும் இனிமேல் அத்தாட்சி என்ன வேண்டியிருக்கிறது? தள்ளாத வயதில் அன்னை கஸ்தூரிபாய் காந்தி அதற்கு வழி காட்டியிருக்கிறார்.

சொக்கநாதன் அல்லது ரங்கன் திருவிளையாடல்

சொக்கநாதன்

அல்லது

ரங்கன் திருவிளையாடல்

என்னும் நாவல்

கீழ்க்கண்ட ஊர்களிலுள்ள

“தமிழ்மணி” ஏஜண்டுகளிடம்

: கிடைக்கும் :

புஸ்தகம் 1-க்கு விலை அணு 12.

மதுரை	பாபநாசம்
திருச்சினுப்பள்ளி	கோவில்பட்டி
கோயம்புத்தூர்	பாலக்காடு
நாகப்பட்டணம்	குடியாத்தம்
நாட்டரசன் கோட்டை	திருநெல்வேலி
பணகுடி	ஆரணி
நிலக்கோட்டை	ராஜபாளையம்
பவானி	ராமேஸ்வரம்
காஞ்சிவரம்	ராமநாதபுரம்
நாமக்கல்	திருவாரூர்
தேவகோட்டை	விருதுநகர்
ஈரோடு	மேலூர்
கும்பகோணம்	அரக்கோணம்
பொள்ளாச்சி	தருமபுரி
உதகமண்டலம்	ஊர்கம்
மன்னார்குடி	தூத்துகுடி
புதுக்கோட்டை	நெய்யூர்
உடுமலைபேட்டை	திருச்செங்கோடு
திருப்பத்தூர்	முத்துப்பேட்டை
பரமகுடி	சோளவந்தான்
திண்டுக்கல்	குளித்தலை
பெரியகுளம்	பெங்களூர்
வத்ருயிருப்பு	திருப்புவனம்
ராணிப்பேட்டை	வேலூர்

மானேஜர் :

“தமிழ்மணி”

75 வருஷங்களாக இந்த A மார்க்

பெருங்காயம்

ஒன்றே மிகவும் உயர்ந்தது என எங்கும் புகழுடன் லட்சக்கணக்கான இந்திய குடும்பங்கள் தினம் உபயோகிப்பது. போலி மட்டக் காயங்கள் பஜாரில் மலிந்து கிடப்பதை வாங்கி ஏமாறாமல் A மார்க் பெருங்காயம்தான் வேண்டும் என்று எப்பொழுதும் கண்டிப்பாய்க் கேளுங்கள்.

A மார்க்கை வாங்கினுல் ஏமாற்ற முடியாது

1 பவுண்டு ½ பவுண்டு ¼ பவுண்டு. பாக்கிங்குகளிலும் 1 சேர் அழகான டின்களிலும் எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

வல்லபதாஸ் தேஜ்பால்

கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

மதராஸ் டி. சி. என்

கோல்டன் மெடல் ஜ்வெலரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களை விட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.

கறுக்காது,

2 வருஷ உத்திரவாதம், மிகவும் அழகாக இருக்கும்

பெரிய சைஸ் 2 அகலமும் அதற்கு மேற்பட்டதும் ஜதை	ரூ. 3 0 0
மத்திய சைஸ் 1¾'' முதல் 2''க்குள் ஜதை	ரூ. 2 8 0
குழந்தை சைஸ் 1¾-க்கு உட்பட்டது ஜதை	ரூ. 2 0 0
வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை	அணு 8

அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இங்கியால் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ

280, வால்டாக்ஸ் ரோடு, பார்க் டவுன் மதருஸ்.

குறிப்பு:-“தமிழ் மணி” பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணு வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

2 அணு பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனும்.

குறிப்பு:—ஸிலோன், பர்மாவுக்கு வி. பி. சார்ஜு அணு 12. மலேய நாட்டுக்கு ரூ. 2. மேற்கண்ட வெளி நாட்டு ஆர்டர்களுக்கு பூரா கிரயமும் தபால் செலவும் ஆர்டருடன் அனுப்பவேண்டும்.

குல்பஹார்

கூந்தல் தைலத்தையே உபயோகியுங்கள்.

கணக்கற்றவர்கள் அந்தத் தைலத்தை உபயோகித் பயனடைந்திருக்கிருர்கள்.

ஒரு புட்டி விலை அணு 14. 3 புட்டி ரூ. 2-8-0.

தபால் செலவு வேறு.

பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் தபால் சிலவு இனும்.

மொத்த வியாபாரிகளுக்குப் பிரத்தியேகமான விலையில் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு நகரிலும் ஏஜண்டுகள் தேவை.

முக்கால் அணு ஸ்டாம்பு அனுப்பினுல் சாம்பில் இனமாக அனுப்பப்படும்.

தாஜ்முல் ஹுசேய்ன்,

வாசனை திரவியங்கள் உற்பத்தி செய்வோர், மௌண்ட் ரோட், மதராஸ்.

சொக்கநாதன் * தொடர் கதை

ஏமாந்த ரஞ்சிதம்

தஞ்சை அரண்மனைக்குள் ஒரே அமர்க்களம். மதுரை வீரரைக்கொன்று, பழி வாங்க அங்கப்பன் எண்ணினன். ஆனல், அவன் எண்ணத்தில் மண் விழுந்தது. மதுரை தளகர்த்தர் வீர சிங்கனின் உயிர் அபூர்வமானது. ஆகவே, ரங்கனும், கமலமும் மாறு வேடமணிந்து, மதுரை வீரர்களின் உயிரைப் பாதுகாத்து, அவர்களைத் தந்திரமாகக் கமலத்தின் அறை வழியாக அந்தரங்க அறைக்கு அழைத்துச்சென்றனர். அந்தரங்க அறையில், அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு மருந்து வைத்துக் கட்டிச் சிரம பரிகாரஞ்செய்துகொள்ள ஏற்பாடு செய்தனர். ரங்கனும், கமலமும் மாறு வேடத்திலிருந்ததால், அவர்கள் யாரென்பதை தளகர்த்தர் வீரசிங்கனல் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனல், ரங்கன் குரலிலிருந்து கண்டுபிடித்தார். ரங்கனே, தளகர்த்தர் உயிரைப் பாதுகாத்ததாக கமலம் சொல்லக்கேட்டு, வீரசிங்கன் சந்தோஷமடைந்தார். இரு யௌவன வீரர்களையும் மனமார வாழ்த்தி ஆசிர்வதித்தார். அந்தரங்க அறையில் கமலமும் இருந்தால், அது சந்தேகத்துக்கு வழியாகுமென வீரசிங்கன் கூறினர். அதை உண்மையென ரங்கனும் உணர்ந்தான்; கமலமும் அதை ஒப்புக்கொண்டாள். அந்தரங்க அறையிலிருந்து கமலம் படிக்கட்டுகளில் துள்ளிக் குதித்து ஓடினள். அவள் அறைக்குச் சென்று அவசரமாக ஆடைகளை மாற்றிக்கொண்டாள். சந்தேகத்துக்கு வழியில்லாமல், அந்தரங்க அறையின் கதவுகளையும், அவளுடைய அறையின் கதவுகளையும் நன்ருக மூடித் தாளிட்டபின், ஒன்றும் அறியாதவள்போல் மோகன அறையை நோக்கி நடந்தாள்.

தஞ்சை அரண்மனைக்குள் நடந்த போராட்டத்தின் எதிரொலி அரண்மனை எங்கும் பரவியது. வெடி குண்டுகள் விழுந்து வெடித்த சப்தம் அரண்மனைக்குள் பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியது. அரண்மனை உத்தியோகஸ்தர்களும், சேவகர்களும் நாலா பக்கமும் சிதறுண்டு ஓடினர்கள். சண்டை நடக்கும் இடந்தெரியாமல் அங்குமிங்கும் ஓடித் திண்டாடிக்கொண்டிருந்தனர். இந்த அதிர்ச்சியும், கலவரமும் மன்னர் காதுக்கு எட்டியது. அரசர் திடுக்கிட்டார்; உண்மையை அறிந்துகொள்ள மந்திரிகளை அழைத்தார். இதே சமயத்தில் மோகனவுக்கும் இச்செய்தி எட்டியது. அவள் மனமுடைந்து கலங்கினள். பாட்டி நல்ல வேளையாக அவளுக்குத் துணையிருந்தாள். இன்றேல், அவள் சித்தங் கலங்கி மூர்ச்சித்திருப்பாளென்பதற்குச் சந்தேகமில்லை. கமலம் அவளுடனில்லை; கமலத்தைப்பற்றியும் மோகன பயந்தாள். பாட்டியிடம் கமலம் எங்கேயென்று பலமுறை கேட்டாள். சிறிது நேரத்தில் கமலம் சாவதானமாக மோகன அறைக்குள் நுழைந்தாள். கமலத்தைக் கண்ட மோகனவுக்குப் புது உயிர் வந்தது; கமலத்தை நோக்கி ஓடிவந்தாள்.

"கமலம்! கமலம்! எங்கே சென்றிருந்தாய்?...நான் உன்னைக் காணதததால் பயந்தேன்....உனக்கு ஏதேனும் ஆபத்து..."

"ஏன் பயந்தீர்கள்? கமலம் செத்து விட்டாளென்ரு?..."

"கமலம் அப்படிச் சொல்லாதே... உனக்கு ஆபத்து வந்து விட்டதோவென்று பயந்தேன். அரண்மனைக்குள் சண்டையாம்!..."

"ஆமாம்! அந்தச் சண்டையின் விவரம் அறிந்து வரத்தான் போயிருந்தேன். சண்டைக்கும், எனக்கும் என்ன சம்பந்தம்?"

"சரி வா...வா...உட்கார்...சண்டையின் விவரமென்ன?

"சண்டையா? எல்லாம் அங்கப்பன் செய்த சதியெனத் தெரிகிறது."

"என்ன சதி செய்தான்?"

"மதுரை தளகர்த்தர் வீரசிங்கன் இன்று காலையில் மன்னரிடம் தூது வந்தார். அந்த ரகசியந்தான் உங்களுக்குத் தெரியுமே!"

"தெரியும்...அப்புறம்?..."

"மன்னரிடம் பேசிக்கொண்டிருந்தபோதே, சின்னராணியும், அங்கப்பனும் அழையா விருந்தினராகச் சென்று காரியத்தைக் கெடுத்துவிட்டார்கள்."

"அங்கப்பனும், ராணியும் காரியத்தைக் கெடுத்துவிட்டார்களென்பது சரி; அதற்காக மதுரை வீரர்களைக் கொல்ல சதி செய்வானேன்?"

"வஞ்சகம், சூது அறியாத உங்களுக்கு உலக விவகாரம் என்ன தெரியும்?"

"ஏன் கலலம்? நீ மட்டும் உலக விவகாரம் ரொம்ப அறிந்திருக்கிருயோ?"

"கோபித்துக்கொள்ளவேண்டாம், நாம் இருவரும் உலக விவகாரம் அறியாதவர்கள்தான்; அதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனல், உங்களைவிட எனக்கு..."

"என்னைவிட நீ உலக விவகாரம் அறிந்தவள்தான்! அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்".

"அவ்வளவு போதும்! உங்களை சொக்கநாத நாயக்கருக்குக் கலியாணஞ் செய்துவைககக்கூடாதென்பது ராணியின் உத்தேசம்...அங்கப்பனுக்கும் அதுதான். அவர்கள் உத்தேசம் பலிக்காதுபோனல் அவர்கள் வாயில் மண்..."

"அவர்கள் என்ன செய்ய முடியும்?..."

"ஆம்; அவர்களுக்கு என்ன தெரியும்? அத்தான் சொக்கரும், நீங்களுந்தான்..."

"கமலம்...என்ன? இந்நேரத்தில் கேலி செய்ய..."

"இல்லை உள்ளதைச் சொன்னேன். அது போகட்டும்;...அந்தக் காரியத்தைக் கெடுத்தபின் மதுரை வீரர்களை சும்மாவிட்டால் நல்லதா? மதுரை அரசர் கோபத்தைக் கிளப்புவதற்கும், மதுரையுடன் சண்டை உண்டுபண்ணுவதற்கும் காரணம் வேண்டாமா?"

"ஓகோ! இப்போது அறிந்துகொண்டேன்..."

"அதற்காகத்தான் மதுரை வீரர்களை வழிமறித்துத் தாக்கியிருக்கிருர்கள். இது பெரிய அக்கிரமம்!"

"சந்தேகமென்ன? ஆனல், நம்மால் என்ன செய்யமுடியும்? மதுரை வீரர்கள் அனைவரும் இறந்துவிட்டார்களோ?...வீரசிங்கன் கதி என்னவாயிற்று?...அரசர் என்ன செய்கிருர்?"

"அரசர் மந்திரிகளை அழைத்து விசாரணை செய்யக் கொலு மண்டபத்துக்குச் சென்றிருக்கிருர். மதுரை வீரர்களின் கதி என்னவாயிற்றென்பதுதான்..."

"கமலம் மறைக்காதே! நீ அறியாத ரகசியமுண்டா? மேலும், ரங்கன் அதற்காகவே தஞ்சைக்கு வந்திருப்பதும் நீ அறிந்த விஷயம்..."

"ரங்கன் வந்திருந்தால் அவரால் மதுரை வீரர்களின் உயிரைக் காப்பாற்றிவிட முடியுமா? தஞ்சை அரண்மனைக்குள் அவர் எப்படி வர முடியும்?"

"அது வெறுங் கதை; நீயும், ரங்கனும் சேர்ந்தால் இந்த உலகத்தையே புரட்டி விடுவீர்கள். ஆயிரம் அங்கப்பனலும் உங்கள் இருவரையும் ஜெயிக்க முடியாது..."

"இது எங்களுக்குக் கிடைத்த பெருமைபோலும்! என் அக்கா?... கமலம் அவ்வளவு பெரிய மோசக்காரியா?"

"கமலம் நீ மோசக்காரி யென்ரு சொன்னேன்? உங்கள் இருவரின் சாமர்த்தியத்தை நான் அறிய மாட்டேனு? போகட்டும்; மதுரை வீரர்கள் எங்கே? அவர்களுக்குக் காயம் பட்டதா? எவரேனும் ஆபத்தான நிலைமையிலிருக்கிருர்களோ?"

"ஆபத்தான நிலைமை யொன்றுமில்லை. இருவருக்குப் படுகாயமேற்பட்டது...தாத்தா வீரசிங்கன் களைத்துப்போனர்...ஆனல், அந்த 5 மதுரை வீரர்களும் சுமார் 100 தஞ்சை வீரர்களை எமலோகத்துக்கு அனுப்பிவிட்டார்கள்."

(அடுத்த பக்கம் பார்க்க)

ஷாக்புரூப் லிவர் கைக்கடிகாரம்



எந்தவித தொழிலாளரும் இதை உபயோகப்படுத்தலாம். மிகவும் உறுதியான மிஷின். ஏதோ கை தவறுதலாக கீழே விழுந்தபோதிலும் கடிகாரத்திற்கு ஒருவிதமான அபாயமும் ஏற்படாது. மிகவும் குறைந்த விலை இரண்டு வருஷ உத்திரவாதத்துடன் லிவர் ரவுண்டு கிளாஸ் ரவுண்டு கேஸ் கடிகாரத்தின் விலை ரூ. 3.15-0 ரவுண்டு கிளாஸ் சதுர சைஸ் கடிகாரம் விலை ரூ.4-12-0 சதுர கிளாஸ் சதுர சைஸ் கடிகாரம் விலைரூ.7-8-0



ஹெட் ஆபீஸ்:—

ஸ்டார் வாச் கம்பெனி,
மூர்மார்க்கட் சென்னை.
கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்.

V. ARUMUGA CHETTY

போலி மார்க்கு சுருட்டுகளைக் கண்டு உஷார்! எங்கும் கீர்த்தியுடன் விளங்குவது

விநாயகர் மார்க்கு சுருட்டுகள்

வ. ஆறுமுக செட்டியார், நெ. 13, அண்ணபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

எமாந்த ரஞ்சிதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

"மதுரை வீரர்கள் சிறந்தவர்கள்தான்; தள்ளாத தளகர்த்தர் வீரசிங்கன் யாரென்பதை அங்கப்பன் அறியவில்லை...அவன் சுத்த மண்டு! அன்றி, மதுரை அரசர்தான் என்ன வீரத்தில் குறைந்தவர்களா?..."

"ஆகா! அத்தான் சொக்கர் வீரத்தைக்கூட நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?"

"கமலம்...அந்தவீரர்கள் எங்கே?"

"என் அறையிலிருக்கிருர்கள்."

"உன் அறையிலா? என்ன!"

"ஆம்; என் அறைக்கு வந்தார்கள்...அங்கிருந்து பாட்டி வீட்டுக்கு அனுப்பிவிட்டேன்..."

"உன் அறைக்கு எப்படி வழி தெரியும்? யாரும் காணவில்லையா? யார் அழைத்துக் கொண்டுவந்தது?"

"நானும், ரங்கனுமே அழைத்துக் கொண்டு வந்தோம்."

"நீயா?...நீயும் சண்டைக்குப் போய் இருந்தாயா?"

"ஆம்; ரங்கனுக்கும், மதுரை வீரர்களுக்கும் உதவிக்குப்போயிருந்தேன்..."

"அங்கு எப்படி சென்ருய்?"

"இப்போ சொல்லுவதற்கு நேரமில்லை...ரங்கன், தஞ்சை சேவகர் ஆடையில் அரண்மனைக்குள் எப்படியோ வந்துவிட்டார். அவர் வந்திருக்காவிட்டால், மதுரை வீரர்கள் கதி அதோகதிதான். தளகர்த்தர் வீரசிங்கன் இதற்குள் பிணமாகி யிருப்பார்...ரங்கனே அவர் உயிரைப் பாதுகாத்து, வெகு தந்திரமாக அவர்களை என்னுடைய அறைக்குக்கொண்டுவந்து சேர்த்தார்..."

"கமலம், நீயும், ரங்கனும் என்ன சாமர்த்தியமான காரியங்களெல்லாம் செய்கிறீர்கள்! இதைப்பற்றி ஒரு வார்த்தைகூட என்னிடம் நீ கூறவில்லையே?"

"உங்களிடம் சொல்லி என்ன பலன்?...மேலும், இங்கு எக்காரியத்தையும் பேச பயமாக இருக்கிறது..."

இந்த சம்பாஷணைகளையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த பாட்டி திடுக்கிட்டாள். "கமலம், ரங்கனும் அந்தச் சண்டைக்கு வந்திருந்தானு?"

"ஆம், அவரே யாவர் உயிரையும் காப்பாற்றினுர்..."

"இப்போது என் வீட்டுக்கா யாவரும் சென்றிருக்கிருர்கள்?"

"ஆமாம், பாட்டி,...ஆனுல், உடனே உன் வீட்டுக்குப் போகமாட்டார்கள்"

"அப்படியானுல் எங்கே இருக்கிருர்கள்?"

"உங்களுக்கு தெரிந்ததுதானே... அந்த அந்தரங்க அறையில்..." என கமலம், அவள் அறையுடன் சம்பந்தப்பட்டிருக்கும் அந்தரங்க அறையின் ரகசியத்தை மறைத்து விட்டாள்.

அதன்பின் மோகனுவும், கமலமும் வேறு விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். மோகனு சந்தேகப்பட்ட விஷயங்களைக் கமலத்திடம் கேட்டுத் தெரிந்துகொண்டாள். ரங்கனும், கமலமும் எவ்வாறு மாறுவேடமணிந்து, மதுரை வீரர்களுக்கு உதவிக்குச் சென்றார்களென்பதையும் கமலம் ஆதிமுதல் எடுத்துக் கூறினுள். இந்நேரத்தில் ரஞ்சிதம் பூனைபோல் மோகனு அறைக்குள் நுழைந்தாள். அவள் வந்ததை பாட்டியும், கமலமும் கண்டு, பேச்சைச் சட்டென நிறுத்திக்கொண்டார்கள். பாட்டிக்கு வயதானபோதிலும் வயோதிகக் குறும்பு விட்டு விடுமா? ரஞ்சிதத்தைக் கண்டதும், சந்தோஷமாக "அடி ரஞ்சிதம் வா! வா,...உன்னைத்தான் தேடிக்கொண்டிந்தேன்" என்ருள்.

"ஏன் பாட்டி என்னைத் தேடிக்கொண்டிருந்தாய்?"

"அடி ரஞ்சிதம், நீ பெரிய துப்பறிபவன் மகள்...நீயும் துப்பறிவதிலும், வேவு பார்ப்பதிலும் இளைத்தவளா? தஞ்சை அரண்மனைக்குள் சண்டையாம்!...ஒரு விவரங்கூடத் தெரியவில்லை...உன்னைக் கேட்டால் தெரியுமென்று உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்..."

"ஏன் பாட்டி? எனக்குமட்டும் அந்த விவரம் தெரியுமா? நானும் உங்களைப்போல ஒரு பெண் தானே?..."

"நீயா? நீ எங்களைப்போல பெண்ணு? நன்ருகச் சொன்னுய்! உன் சாமர்த்தியமும்..."

"பாட்டி போதும், போதும்; சண்டையைப்பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியுமோ அதுதான் எனக்கும் தெரியும். ஏன் கமலத்தைக் கேட்டால் உண்மை தெரியுமே?..."

"ஏண்டி! கமலம் மட்டும் எப்படி அறிவாள்? அவள் எங்களோடு இந்த அறையிலேயே இருக்கிருள்."

பாட்டி கூறியதைக் கேட்ட ரஞ்சிதம் முகம் மாறியது. அவள் எதிர்பார்த்த உளவு கிடைக்கவில்லை. பாட்டி பைத்தியக்காரியா? நறுக்கென ஒரு போடு போட்டாள். "உன் சாமர்த்தியமும், தந்திரமும் கமலத்துக்கு எங்கிருந்தடி வரும்?"

பாட்டி கூறிய வார்த்தைகளும், சாதுர்யமாக ரஞ்சிதத்தை மடக்கியதும் கமலத்துக்குப் பரம சந்தோஷத்தை உண்டுபண்ணியது. கமலம் அந்த உணர்ச்சியை வெளிக்காட்டவில்லை. அவளே ரஞ்சிதத்தை ஆழம் பார்க்க ஆரம்பித்தாள்.

"ரஞ்சிதம், என்ன சண்டை? எதற்காகச் சண்டை? ஒன்றும் தெரியவில்லையே..."

"என்னமோ அம்மா எனக்கும் அந்த விவரம் தெரியவில்லை. மதுரை வீரர்கள் சிலர், இளவரசி மோகனுவை, மதுரை அரசர் சொக்கருக்கு விவாகஞ் செய்து வைக்கக் கேட்டு வந்தார்களாம். தஞ்சை அரசர் அதற்கு மறுத்து விட்டாராம்! அதற்காகக் கோபங் கொண்டு மதுரை வீரர்கள், அரண்மனை மண்டபத்தில் தனிமையாக அகப்பட்ட அங்கப்பனை எதிர்த்துக் கொலை செய்ய எத்தனித்தார்களாம்!"

"என்ன? என்ன அக்கிரமம்!" என்ருள் கமலம்.

"ஆமாம், அக்கிரமந்தான்! உடனே தஞ்சை சேவகர்கள் பாய்ந்து சென்று மதுரை வீரர்களை எதிர்த்துச் சண்டைசெய்தார்களாம், இதுதான் சண்டைக்குக் காரணம்..."

"அப்புறம் என்னவாயிற்று?... அந்த மதுரை வீரர்கள் எங்கே? அவர்களைக் கொன்று விட்டார்களா?"

"இருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்கள். மற்ற மூவரும் எப்படியோ தப்பித்துக் கொண்டு ஓடி விட்டார்கள்...அரண்மனையில்தான் எங்கேயோ பதுங்கியிருக்கிருர்களாம்!"

"அரண்மனைக்குள்ளா? என்ன ஆச்சரியம்! அவர்களை இன்னமும் தேடிக் கண்டுபிடிக்க வில்லையா?"

"இல்லை...அந்த மதுரை ஆசாமிகள் நாமிருக்கும் அந்தப்புரப் பக்கமாகத்தான் வந்தார்களாம்."

"அந்தப்புரத்துக்கா? இது பெரிய ஆச்சரியம்!...அப்படியானுல், உன் அறையில், அல்லது, என் அறையில் அந்த மதுரை வீரர்கள் ஒளித்துக்கொண்டிருக்கவேண்டும்; இரு அறைகளிலுமில்லாவிட்டால் இளவரசி மோகனு அறைக்குள்தான் அவர்கள் பதுங்கியிருக்க வேண்டும். இளவரசி உங்கள் அறையை நன்ருகச் சோதித்துப் பார்த்தீர்களா?" என்ருள் கமலம். யாவரும் கொல்லெனச் சிரித்தார்கள். "ரஞ்சிதம் உன் அறையையும் போய் பார்!... என் அறையைப்பற்றி எனக்குக் கவலை இல்லை...ஏனெனில், நான் இங்கு வரும்போதே அதை நன்ருகப் பூட்டிவிட்டு வந்தேன்...." என்ருள் கமலம். மீண்டும் அவர்கள் எல்லோரும் நகைத்தார்கள். ரஞ்சிதம் ஏமாற்றமடைந்தாள். அவள் எண்ணிவந்த காரியம் வேறு. மதுரை வீரர்கள் மறைந்த ரகசியத்தில் கமலம் சம்பந்தப்பட்டிருப்பாளென்று சந்தேகித்து, ஏதேனும் உளவு கிடைக்குமென்ற நோக்கத்துடன் வந்தாள். அவள் எதிர்பார்த்தபடி காரியம் நடக்கவில்லை. கமலமோ ஒன்றுமறியாதவள்போல் மோகனு அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள். பாட்டியையும், ரஞ்சிதம் எதிர்பார்க்கவில்லை. மதுரை வீரர்கள் மறைந்திருந்தால், கமலம் அறையிலிருக்க வேண்டும்; இன்றேல், பாட்டியின் வீட்டிலிருக்கவேண்டும். பாட்டியோ வீட்டைப் பூட்டிவிட்டு அதிகாலையிலிருந்து மோகனுவுடனிருக்கிருள். கமலமும் அப்படியே. என்ருலும், ரஞ்சிதத்துக்குச் சந்தேகம் சந்தேகந்தான். ஆகவே, அவள் கமலத்தையும், பாட்டியையும் மாறி மாறிப் பார்ப்பதும், தலை கவிழ்ந்து கொள்ளுவதுமாக இருந்தாள்.

கமலத்துக்கு இது பிடிக்கவில்லை. அவள் எப்படியும் ரஞ்சிதத்தை அங்கிருந்து தொலைக்க வழி தேடினுள். இந்நேரத்தில் மோகனு அறைக்கு வெளியில் பெரும் சப்தம் கேட்டு யாவரும் பேச்சு மூச்சில்லாமல், வாசற்பக்கம் நோக்கினுர்கள். ரஞ்சிதம் சட்டென எழுந்து வாசல் பக்கம் ஓடினுள்; அவளைப் பின் தொடர்ந்து ஓடினுள் கமலம்.

(தொடரும்)

கர்ப்ப சஞ்சீவி எண்ணை

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல் சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினுல் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள், உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிறு பெருத்தல், காந்தல் எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு சொம்பு ஜலம்கூட தூக்க முடியாத பலயீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்ந்து கர்ப்பபை சுத்திகரிக்கப்பட்டு, கர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். கர்ப்பம் தரிக்க 6 வித மலடு தீரும். கர்ப்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளை கூட்டுடன் வெளியில் அகற்றிவிடும். திடகாத்திரமும் பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

நபருக்கு 3 புட்டி வேண்டும். இந்த பேப்பரைக் குறித்து எழுதவும்.

1 புட்டி ரூ. 2. 3 புட்டி 5-ரூ. செலவு வேறு.

குணம் இல்லாவிடில் ரூ. 5. வாபஸ்

R. M. K. சிவசுப்ரமண்யம்

சித்த வைத்தியசாலை பழனி. S. I.

பிராஞ்சு:—16, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை.

-: அரசனை நம்பினால்...? :-

மன்னர் மயக்கம்! - - - - வெள்ளையர் தஞ்சமா?



சமஸ்தான சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்திருக்கும் மகாத்மா காந்தி. இவர் மனைவியார் கஸ்தூரிபாய் காந்தி, ராஜகோட் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறையிலிருக்கிறார்.

சமஸ்தான மன்னர்கள் வெறும் பொம்மைகள்; அவர்கள் சுகபோகத்தில் மூழ்கி இருக்கிறார்களேயொழிய சமஸ்தான விஷயங்களில் அவர்களுக்கு அக்கரையே கிடையாது. சமஸ்தான வருவாயெல்லாம் அவர்கள் சுகபோகங்களுக்கே போய்ச்சேருகின்றன சமஸ்தான மக்கள் அதை வெறுக்கிறார்கள். சமஸ்தான நிர்வாகத்தில் அவர்களுக்கு உரிமை கேட்கின்றனர். மன்னர்கள், அவர்களுக்கு உரிய உரிமைகளைக் கொடுத்து, சமஸ்தானங்களை நிர்வகிக்கலாம். இதுதான் சரியான வழி. ஆனால், மன்னர்கள் என்ன செய்கிறார்கள்? பழைய எதேச்சாதிகாரத்திலும், டாம்பீகத்திலும் மூழ்கிக்கிடக்கின்றனர். வெள்ளையர் அவர்களைத் தட்டிக் கொடுக்கிறார்கள். வெள்ளையரை, நம்பினால், சமஸ்தான மன்னர், அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதிக்குள்ளாவார்களென்பது உறுதி.

இந்தியாவில் நூற்றுக் கணக்கான சமஸ்தானங்களிருக்கின்றன. ஒரு சிலவற்றைத் தவிர இதர சமஸ்தானங்களெல்லாம் சிறு சமஸ்தானங்களே. அந்த சமஸ்தானங்களின் வரவு, அந்த சமஸ்தானங்களின் நிர்வாகத்துக்கே போதுமானதல்ல. அவ்வாறிருந்தும், அந்தக் குட்டி சமஸ்தான மன்னர்களோ, வருவாயில் பெரும்பாகத்தை வாயில் போட்டு ஏப்பம் விடுகிறார்கள். சமஸ்தான மக்கள் இரத்தஞ் சிந்தப் பாடு பட்டபின், கிடைக்கிற வருவாயை மன்னர்களுக்குக் கொட்டிவிட்டு, அவர்கள் மண்ணைத் தின்று தண்ணீர் குடிக்கக்கூடிய நிலைமையிலிருக்கிறார்கள். அந்த சமஸ்தானங்கள் இருந்தாலென்ன, ஒழிந்தாலென்ன? அவை இருப்பதிலும், இறப்பதே மேல்.

டம்பாச்சாரிகள்!

சமஸ்தான மன்னர்களில் பெரும்பாலோர் பெரிய டம்பாச்சாரிகள். இவர்கள் சுகபோகங்களுக்கு விரையமாகும் பணத்துக்குக் கணக்கே கிடையாது. சமஸ்தான மன்னர்கள் பெரும் டம்பாச்சாரிகளென்பதை இந்தியர் அவ்வளவு தூரம் அறிந்து கொள்ள முடியாது. இவர்கள் மேனுடுகளுக்குப் போய்விட்டால் அங்கு இவர்கள் செய்யும் செலவுகளைக் கண்டு, மேனுடுகளிலுள்ள குபேரர்களே திகைத்துப் போகின்றனர். இதிலிருந்து இவர்கள் டாம்பீகம் எப்படி இருக்குமென்பதை எளிதில் தெரிந்துகொள்ளலாம். சமஸ்தானங்களில் நடக்கும் அக்கிரமங்களோ சொல்லிமுடியாது. அழகிய பெண்களுக்கும், தனவந்தர்களுக்கும் எப்பொழுதும் ஆபத்து. அடிக்கடி இது சம்பந்தமாகப் பல வழக்குகளும், கொலைகளும் நடந்திருக்கின்றன. இந்தச் சம்பவங்களைக்கொண்டு நிதானித்துப் பார்த்தால், சமஸ்தானங்களின் ஊழல்கள் நன்கு விளங்கும். சமஸ்தான மன்னர்களைக் கட்டுப்படுத்தவோ வழியில்லை. அவர்கள் அனைவரும் எதேச்சாதிகாரிகள். அவர்கள் இட்டது சட்டம். சட்டத்தை மீறினால் உயிருக்கு ஆபத்து. சமஸ்தானங்களின் இன்றைய நிலைமை இதுதான்.

உரிமை இல்லை

சமஸ்தான் மக்களுக்குப் பிரஜா உரிமை இல்லை. அரசியலிலும் உரிமை கிடையாது. அந்த உரிமைகளைக் கேட்டு இன்று சமஸ்தான மக்கள் பொறுப்பாட்சிப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். பொறுப்பாட்சி கொடுப்பதால் மன்னர்களுக்குக் கெடுதி இல்லை. மக்களின் ஆதரவைப்பெற்று நடக்கும் ஆட்சியே நீடித்திருக்கும். மக்களின் ஆதரவைப் பெறாத எந்த ஆட்சியும் நீடித்திருக்காது; நீடித்திருக்க முடியவும் முடியாது. மக்களுக்குப் பொறுப்பாட்சி கொடுப்பதால், மன்னர்கள் டம்பாச்சாரித்தனத்துக்கு இடையூறு ஏற்படலாம். மன்னார்கள் டம்பாச்சாரித்தனத்தைக் கட்டுப்படுத்தித்தானுகவேண்டும். எக்காலமும் எதேச்சாதிகாரிகளாக இருந்துகொண்டிருக்க முடியுமா? முடியாது. கால சக்கிரத்தின் வேகத்தை மன்னர்கள் கவனிக்கவேண்டும். காலத்துக்குத் தகுந்தாற்போல் அவர்கள் போக்கையும் மாற்றிக்கொள்ள வேண்டும். ஒரே பிடிவாதமாக இருந்தால் மன்னர்கள் முறிவது நிச்சயம். முறிவதோடு மட்டுமல்ல; அவர்கள் சமஸ்தானங்களையே விட்டுவிட்டு ஓடக்கூடிய நிலையை ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

வெள்ளையர் சூழ்ச்சி!

சமஸ்தானங்களில் நடக்கும் பொறுப்பாட்சிப் போராட்டத்தில் வெள்ளையர் தலையிடுவது அதிகப்பிரசங்கித்தனம். அவர்கள் தந்திரமாகத் தலையிடுகிறார்கள். பிரிட்டிஷ் இந்தியா விழிப்படைந்து விட்டது; பொறுப்பாட்சிக்கு அது தயார். பிரிட்டிஷ் இந்தியாவை இனிமேல் தலையெடுக்க முடியாமல் தடுக்க வெள்ளையரால் முடியாது. அவர்கள் ராணுவத்தாலும், கடற்படை, விமானப் படைகளாலும் முடியாது. பிரிட்டிஷ் இந்தியாவுக்கு அவர்கள் பொறுப்பாட்சி கொடுத்தே தீரவேண்டும். இந்த நிலைமையில், பிரிட்டிஷ் இந்தியரை மடக்க அவர்கள் பெடரேஷனில் சமஸ்தானங்களையும் புகுத்திருக்கிறார்கள். இது கழுதையையும், குதிரையையும் ஒரு வண்டியில் பூட்டியமாதிரியாகும். சமஸ்தானங்களைக் கொண்டு, பிரிட்டிஷ் இந்தியரின் அடிமை விலங்கை இறுகப் பிணைக்க வெள்ளையர் நினைக்கிறார்கள். இந்த சூழ்ச்சிக்கு மன்னர்களும் துணையிருக்கிறார்கள். மன்னர் மட்டுமல்ல; காங்கிரஸின் போக்குப் பிடிக்காத ஹிந்து மகா சபையினர் கூட அந்தரங்கத்தில் சமஸ்தானங்களில் தலையிட்டு, மன்னர்களுக்கு உதவிச் செய்வதாகத் தெரிகிறது. கூலிக்கு ஆட்கள் எங்குதான் பஞ்சம்? ஜெய்பூர், ராஜ்கோட் போன்ற சில சமஸ்தானங்களில் ஹிந்து மகா சபையைச் சேர்ந்த சிலர் மன்னர்களுக்கு உதவியாக இருந்து பொறுப்பாட்சி போராட்டத்தை நசுக்க வேலை செய்து வருவதாகத் தெரிகிறது. ஹிந்து மகா சபையினர் செய்வது தேசத்துக்கே மகா துரோகம். சமஸ்தானங்களை வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை. சமஸ்தான மன்னர்களை நசுக்கிவிட வேண்டுமென்பதும் காங்கிரஸ் நோக்கமல்ல. சமஸ்தானங்களை நன்றாக நிர்வகித்து சமஸ்தான மக்களுக்கு நல்ல பொறுப்பாட்சி கொடுக்கவேண்டுமென்பதே காங்கிரசின் நோக்கம். இந்த நோக்கத்தை அறிந்த சில மன்னர்கள் மக்களுக்குப் பொறுப்பாட்சி கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். சில தறுதலை மன்னர்களும், வெள்ளையரை நம்பிய சில பொம்மை அரசர்களுமே, சமஸ்தான மக்களின் சாத்வீகப் போராட்டத்தைப் பலாத்காரத்தால் நசுக்க வெறிகொண்டிருக்கிறார்கள். இவர்கள் வெறி நீடித்திருக்குமா? இல்லவே இல்லை. என்றைக்காவது மன்னர் தலை சாய்ந்துதான் தீரவேண்டும். சமஸ்தான மக்களைப் பகைத்து எந்த மன்னரும் அரை நிமிஷமும் ஆட்சி செய்ய முடயாது. பிரிட்டிஷாரை நம்பினால் அவர்கள் மோசம் போவது நிச்சயம். அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட நிலைமைக்கு, பலாத்கார வெறி பிடித்த மன்னர்கள் வந்து சேருவார்களென்பது திண்ணம். மன்னர்கள், வெள்ளையரை நம்பக்கூடாது; மக்களின் ஆதரவையே தேடவேண்டும். அதுதான் அவர்களுக்கு உயிர்; அது ஒன்றே அவர்கள் ஆட்சிக்குப் பக்க பலத்தைக் கொடுக்கும். வெள்ளையரை நம்பினால், மன்னர்கள் தெருவில் நின்று தவிக்கவேண்டியதுதான்!

காரம், மணம், குணம், நிறம், ஒருங்கே அமைந்த
வி. என். ஷண்முகம் பட்டணம் பொடியை
எப்பொழுதும் உபயோகியுங்கள்
நெ. 8, ஆச்சாரப்பன் சந்து, மதராஸ். (ஏஜெண்டுகள் தேவை)

இந்தியர் மூலதனத்தால்
இந்தியர் உழைப்பால்
இந்தியரால்

உற்பத்தி செய்யப்படும்

அ. ச. ரொட்ரிக்ஸ் கம்பெனியாரின்

இயற்கை உபாபஸ் எருக்களையே

உபயோகியுங்கள்.

உங்கள் மாசூலைப் பெருக்குங்கள்

இந்திய மாதா உங்களைக் கேட்பது அதுவே

சுலப்பை மார்க் இயற்கை உரம்

வழிக்கு வந்தார்!

முத்தம்மாள்:—பொன்னம்மாள் வயலையும், தோட்டங்களையும் பார்த்தீர்களா? என்ன விளைவு! நவதானியங்களும், காய்கறிகளும், பழவகைகளும் அவள் வீட்டில் வந்து வண்டி வண்டியாகக் குவிகின்றனவே. நம்முடைய வயல்கள் மட்டும் தீய்ந்து பாழாய்ப் போவதற்குக் காரணம் என்னவென்று அறிந்தீர்களா?

புருஷன்:—காரணமா? காரணம் கேட்கவா வேண்டும்? நம்முடைய கர்மவினையடி, வினை! படாத பாடுபட்டேன்-இராப் பகலாக உழைத்தேன்; என்ன பலனைக் கண்டேன்?—எல்லாம் கால வித்தியாசந்தான்!

முத்தம்மாள்:—அதுதான் தப்பு! நம்முடைய வயல்களுக்கும், தோட்டங்களுக்கும் நீங்கள் சரியான உரம் போடுவதில்லை; செயற்கை உரத்தை நம்பி மோசம் போனீர்கள்; வயல்களையும் குட்டிச்சுவராக்கி விட்டீர்கள்.

புருஷன்:—போடி போ-உனக்கு உரத்தைப்பற்றி ரொம்பத் தெரியும்! எத்தனையோ வகையான உரங்களை உபயோகித்துப் பார்த்துவிட்டேன்; எல்லாத்துக்கும் அதிர்ஷ்டம் வேண்டுமடி.

முத்தம்மாள்:—ஆமாம்; நீங்கள் சரியான செட்டு; உரம் போட்டால் பணம் போய்விடுமேயென்று, உரத்தைச் சுருக்கிவிட்டீர்கள். உரமில்லாமல் விளைவு எப்படி வரும்? பொன்னம்மாள் வீட்டைப் பார்த்தீர்களா? அ. ச. ரொட்ரிக்ஸ் கம்பெனியாரின் உரத்தை உபயோகித்துக் கொள்ளை கொள்ளையாகப் பணம் திரட்டுகிறார்கள். ரொட்ரிக்ஸ் கம்பெனியாரின் இயற்கை உபாபஸ் உரந்தான் வயல்களுக்கும், தோட்டங்களுக்கும் ஏற்றதாம்; விலையும் நயம் என பொன்னம்மாள் சொன்னாள். என் அக்கா கூட அப்படித்தான் சொன்னாள்... இந்த ஒரு விதைக்காவது ரொட்ரிக்ஸ் கம்பெனியாரின் உரத்தை உபயோகித்துப் பாருங்களேன்?

புருஷன்:—அப்படியா? பார்க்கலாம். இந்த விதைக்கு ரொட்ரிக்ஸ் கம்பெனியாரின் உரத்தையே உபயோகித்துப் பார்க்கிறேன். இப்போது உனக்குச் சந்தோஷந்தானே?

முத்தம்மாளுக்கு வந்த ஆனந்தத்துக்கு அளவில்லை. ஓடோடியும் அவள் அக்காள் ரத்தினம்மாளிடஞ் சென்றாள்.

முத்தம்மாள்:—அக்கா, சொர்ணம்மா, ரத்தினம்மா, என் புருஷனை வழிக்குக் கொண்டுவந்துவிட்டேன். அவர் நம்ம ரொட்ரிக்ஸ் கம்பெனியாரின் உரத்தை உபயோகிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ரத்தினம்மாள்:—உன் புருஷன் இப்போதுதான் அந்த உரத்தை உபயோகிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். என் புருஷன் அன்றைக்கே ஒப்புக்கொண்டு, ரொட்ரிக்ஸ் கம்பெனியாரின் உரமும் எங்கள் வீடு வந்து சேர்ந்துவிட்டது. சொர்ணம்மாள் புருஷனும் அந்த உரத்தையே உபயோகிக்கப்போகிறார். இந்த விதைக்கு ரொட்ரிக்ஸ் கம்பெனியாரின் உபாபஸ் உரத்தையே எல்லோரும் உபயோகிக்கப் போகிறோம். ஏராளமான பலன் கிடைக்குமென்பதற்கும் சந்தேகமே இல்லை.

விவசாயம் இந்தியர் உயிர் நாடி என்பதை மறந்துவிடாதீர்கள்.

விவரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்

அ. ச. ரொட்ரிக்ஸ் & கம்பெனி, போன் மில்ஸ், கடம்பூர் S. I. Ry., (திருநெல்வேலி ஜில்லா)

எ. எஸ். டி. எப். ரொட்ரிக்ஸ், காட்பாடி போன் மில்ஸ், காட்பாடி M. S. M. Ry., (வட ஆற்காடு ஜில்லா)

வாரங்கால் போன் மில்ஸ், வாரங்கால் (நிஜாம்) | **வால்டயர் போன் மில்ஸ்,** வால்டயர் (B. N. Ry.,)

இன்னமும் தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கியமான ஊர்களிலும் பிராஞ்சுகள் உண்டு.

சங்கநாதம்

எக்கடைச் சரக்கோ!

விடியா மூஞ்சி — வேலைக்குப் போனால்...?

வெள்ளைக் காக்காய் பறக்குது!

தமிழர் என்ன கொக்கா?

தாடியில் மாட்டிக் கொள்ளாதீர்!

(பூம்-பூம்)

தமிழ் நாட்டில் காங்கிரஸ் இயக்கம் பலப்பட்டதற்குத் தமிழரே காரணம். தமிழரைத் தட்டி எழுப்பிய வீரர்கள் பலர். அவர்களில் சிலர் மறைந்துவிட்டார்கள்; சிலர் ஒதுங்கிவிட்டார்கள். ஒதுங்கிய சிலர் காங்கிரஸைத் திட்டவோ, அல்லது, காந்திஜியைத் தூற்றவோ துணியவில்லை. ஏன்? காங்கிரஸ் இயக்கம் எப்பேர்ப்பட்டது, அதை நடத்திவரும் காந்திஜியின் சக்தி எத்தன்மை வாய்ந்ததென்பதை அவர்கள் நன்கறிவார்கள். என்றாலும், அவர்கள் காங்கிரஸிலிருந்து ஒதுங்கினார்கள். அதற்குக் காரணம் என்னவென்று கேட்கலாம். அது பெரிய ராமாயணம். அதை இப்பொழுது வளர்த்துக்கொண்டிருக்க முடியாது.

* * *

வேறு ஒரு சாரார், காங்கிரசிலிருந்த பழம் பெருச்சாளிகள். காங்கிரஸ் பணத்தை நன்றாகத் தின்று கொழுத்தவர்கள். காங்கிரஸ் பெயரால் "பெரியாரா"னவர்கள். இவர்களுக்குத் தலைவர் பதவியில் மோகம் அதிகம். தலைவர் பதவி கிட்டாது போகவே காங்கிரசிலிருந்து வெளியேறினர். வெளியேறியதோடு, மட்டுமல்ல; காங்கிரஸ் பணத்தைக் கொள்ளையடித்தார்கள்; அத்தோடாவது தொலைந்துபோய் இருக்கக்கூடாதா? காங்கிரஸை எதிர்க்கவும், காங்கிரஸ் தலைவர்களைத் தூற்றவும் காந்திஜியை நிசிதமாக-அற்பத்தனமாகத் நிந்திக்கவும் முற்பட்டிருக்கிறார்கள். இவர்களால் தேசத்துக்குக் குறிப்பாகத் தமிழ் நாட்டுக்குக் கேடு; தமிழ்நாட்டிற்குப் பெரிய அவமானம்.

* * *

பழைய காங்கிரஸ் வாதியான ராமசாமி நாயக்கரைத் தமிழர் எல்லோருக்கும் தெரியும். அவர் தியாகமும், உழைப்பும் எப்பேர்ப்பட்டதென்பது நன்றாகத் தெரியும். அவர் காங்கிரசில் சேர்ந்தபின்தான் அவரைத் தமிழர் அறிவார்கள். அதற்குமுன் அவர் இருந்த இடங்கூடத் தெரியாது. காங்கிரசிலிருந்து விலகி, சுயமரியாதை இயக்கமென ஒன்றைச் சிருஷ்டித்து, அந்த இயக்கத்தின்பேரால் காங்கிரசையும், காந்திஜியையும் தூற்றுவதிலேயே கண்ணாயிருந்தார். கடவுள் பொய், மதம் பொய், ஜாதி பொய், ஆண் பெண் பொய், எல்லாம் பொய்; ராமசாமி நாயக்கர்தான் மெய் என்ற பிரசாரத்தில் இறங்கினார். இந்த சுயமரியாதைகாரர் சூன்யப் போக்கை,-அறிவற்ற போக்கைத் தமிழர் பொருட்படுத்தவே இல்லை. அது எக்கடைச் சரக்கோவென்று கவனியாதிருந்தார்கள். சுயமரியாதை இயக்கம் கழுதை தேய்ந்து கட்டெறும்பானகதையில் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி குன்றி, தேய்ந்து வந்தது. தமிழ்நாட்டிலிருந்து அது மறைந்து போகும் நிலைமையில் எப்படியோ ஜஸ்டிஸ் கட்சி ஜோதியில் கலந்தது. அங்கும் அதற்கு விமோசனமில்லை. விடியா மூஞ்சி வேலைக்குப் போனால், வேலை கிடைத்தாலும் கூலி கிடையாதென்பார்களே! அதேபோல் சு. ம. இயக்கம் போகிற இடத்தையும் சேருகிற கட்சியையும் குட்டிச்சுவராக்கிக்கொண்டே வந்தது. சு. ம. வைப் பிடித்த சனியன் ஜஸ்டிஸ் கட்சியையும் தொடர்ந்துகொண்டது. ஜஸ்டிஸ் கட்சியும் அழிந்தது!

* * *

காங்கிரஸ்காரர் சட்ட சபைகளையும், ஸ்தல ஸ்தாபனங்களையும் கைப்பற்றினார்கள். உருக்குலைந்து உருப்படாமற் போன ஜஸ்டிஸ் கட்சியும், சுயமரியாதைக் கட்சியும் மெதுவாகத் தலை காட்டியது. காங்கிரசையும், காங்கிரஸ் தலைவர்களையும், பார்ப்பனரையும், பார்ப்பனத் தலைவர்களையும் திட்டுவதையே ஒரே திட்டமாகக் கொண்டு, தமிழ் நாட்டில் ஜாதித் துவேஷப் பேயைக் கிளப்பிவிடத் தீவிரமாக வேலைசெய்தார்கள். காங்கிரசின் விரோதிகள் இப்பேர்ப்பட்ட தருணத்தைத்தான் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நாடில்லாத ராஜாக்களும், நாதியற்றநவாப்களும், "இன்சால்வெண்ட் ஜமீன்தார்களும்", மூளையைப் பறி கொடுத்த மூதாதைகளும், பணக்காரர்களும் சு. ம. காரரைத் தட்டிக்கொடுக்கப் புறப்பட்டார்கள். பணத்தை வாரி இறைத்தார்கள்; சு. ம. காரருக்குச் சரியான வேட்டை! பணத்துக்குப் பணம்; சோற்றுக்குச் சோறு; தாக சாந்திக்கு உயர்ந்த "சீமைத் தண்ணீர்!" வேறு என்ன வேண்டும்? சும்மா ஆடுகிற பேய் கொட்டுக் கண்டால்விடுமா? தமிழ் நாட்டில் தலைவிரி கோலமாக ஆர்ப்பாட்டஞ்செய்ய ஆரம்பித்தார்கள். செத்துக்கிடந்த பத்திரிகைதாள்களும், தேடுவார், தீண்டுவாரற்றுக்கிடந்த பத்திரிகைகளும் தலைகாட்ட ஆரம்பித்தன. சுயமரியாதைகாரரும், ஜஸ்டிஸ் கட்சியினருமே தமிழர்கள்; தமிழர் பிரதிநிதிகளென்று இறுமாப்புக்கொண்டு, தமிழ் நாட்டில் ஒரே காலித்தனத்திலிறங்கினார்கள். இந்தப் பணவெறி எத்தனை நாளைக்கு நீடிக்கும்? தமிழருக்கு இவர்கள் யாரென்பது தெரியாதா? பழைய கருப்பண்ணாத்தைகள்தானே! அவர்களை ஆதரிப்பதே பாவமென்று ஒதுங்கிவிட்டார்கள். ராஜாக்கள் பணம் இருக்கும் வரையில் ஆடித்தீர்த்தார்கள்; பணமும் குறுகியது; சு. ம. காரர் ஆர்ப்பாட்டமும் ஒடுங்கியது.

* * *

எனது தோழர்கள் சிலருக்கு ஒரு சந்தேகம். சு. ம. காரர் ரூபாய் 7549-5-10 வரவு காட்டி, ரூபாய் 7141-10-4க்குச் செலவு காட்டியிருக்கிறார்களே, அவர்களுக்கு என்ன செலவு? ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு என்ன செலவு வந்ததென்று ஆச்சரியப்பட்டார். அந்தத் தோழர்கள் அறியாமைக்கு இரங்கினேன். சு. ம. காரர் பரிசுத்த பூனைகள், அந்தப் பூனைகளும் பால் குடிக்குமாவென்று அவர் எண்ணியிருந்தார் போலும்! பாவம்! அவர் ஒரு அப்பாவி; சு. ம. காரர் ஜாலவித்தைகள் அவருக்குத் தெரியாது. கணக்குக் காட்டிய 7000 ரூபாய் வெறும் ஏமாற்றுவித்தை. இந்த 7000த்தைப் போல் எத்தனை 7000ங்கள் ரகசியமாக வந்தனவோ, அது சு. ம. குட்டிச் சாத்தான்களுக்கே தெரியும். அவர்கள் ரகசியமாக விழுங்கி ஏப்பம் விட்டது போக, வெளிக்கு மகா பரிசுத்தவான்களைப் போல் 7000க்குக் கணக்குக் காட்டியிருக்கிறார்கள் அது எப்படியோ போகட்டும்; சு. ம. காரருக்கு இவ்வளவு செலவு எதற்கு என்று கேட்டாரே அதற்குப் பதில் சொல்லுகிறேன். தமிழைக் காப்பாற்றப் போவதாகக்கூறி, ஹிந்தி மறியலை ஆரம்பித்தார்கள். அதற்காக ஊர்வலங்களும், மறியலும் நடத்தினார்கள். ஊர்வலங்களுக்கும், மறியல்களுக்கும் ஆட்கள் சும்மா வருவார்களா? கைமேல் காசு வாங்கிக்கொண்டே மறியலுக்குப் புறப்பட்டார்கள். தாய்மாருக்குத் தனிக்கௌரவம் வேண்டாமா? அவர்களுக்கு இரட்டிப்புக் கூலி! கூலி மட்டுப்படவே சு. ம. காரர் மறியலும், ஆர்ப்பாட்டமும், அட்டகாசமும், தானாகவே ஒடுங்கிவிட்டது. ஒற்றவாடையில் உருப்படாமற் போனவர்களைத் திரட்டினார்கள். இலவச விளம்பரஞ் செய்தார்கள்; கச்சேரி நடத்தினார்கள்! இதுதான் ரகசியம்! பணத்துக்கு வேறு வழி இருக்கிறதாவென்று சு. ம. தலைவர்கள் மூலைமுடுக்கெல்லாம் முட்டிப் பார்த்தார்கள்! பாவம்! ஒரு தம்பிடிக்குக்கூட வழியில்லை. பழைய ராஜா, ஜமீன்தார்களெல்லாம் கையை விரித்துவிட்டதாகக் கேள்வி.

* * *

காங்கிரசும், காங்கிரஸ் சர்க்கார்களும் உரம் பெற்று, இந்திய மக்களிடையே செல்வாக்கடைந்து வருவது காங்கிரஸ் விரோதிகளுக்கு வயிற்றெரிச்சல். எப்படியாவது காங்கிரஸ் மந்திரிகளைக் கவிழ்க்கவிடவேண்டுமென்ற ஒரே தர் எண்ணத்துடன் காங்கிரஸ் மந்திரிகள் மீது பழி சுமத்துகிறார்கள். காங்கிரஸ் பார்ப்பன மயம்; காங்கிரஸ் மந்திரி சபையும் பார்ப்பன மயமென்று கூறுகிறார்கள். தமிழ் நாட்டில் பார்ப்பனர் ஆதிக்கத்தை நிலைநாட்டவே காங்கிரஸ் மந்திரி சபை சூழ்ச்சி செய்கிறதென்று சொல்லுகிறார்கள். பார்ப்பனர் அப்படிச் சூழ்ச்சி செய்வார்களேயானால்-அவர்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட வேலை செய்வார்களேயானால், அதற்குக் காரணம் யார்? ஆண்மையற்ற தமிழரே யாவர். தமிழ்நாடு போச்சு, தமிழ் போச்சே என வெறும் கூச்சல் போடும் மானமில்லாத தமிழர்தான் காரணம். அவர்கள் பேடியென்று கூறினால், அதற்காக அந்தத் தமிழர் கோபித்துக்கொள்ளக்கூடாது. கேவலம், ஒரு சிறு கூட்டத்தை எதிர்த்து நிற்கத் தைரியமில்லாத இவர்களா, தமிழ் நாட்டையும், தாய்நாட்டையும் பாதுகாக்கப் போகிறார்கள்? இவர்களா உண்மைத் தமிழர் என்று கேட்கிறேன். இதே சு. ம. ஜோதியில் கலந்திருந்த மந்திரி ராமநாதன் இவர்களுக்குச் சுடச் சுடப் பதில் கொடுத்திருக்கிறார். தமிழையோ, தமிழ்நாட்டையோ இவர்களால் பாதுகாக்க முடியாது. உண்மையான அபிமானத்துடன் இவர்கள் கிளர்ச்சி செய்தாலல்லவோ இவர்கள் கிளர்ச்சி தலை தூக்கும்; தமிழரும் இவர்களை ஆதரிப்பார்கள். படிப்பது ராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில் என்றபடி, தமிழ், தமிழ்நாடு என்று வேஷம் போட்டுக்கொண்டு, சுயநலத்தில் கண்ணோட்டமாயிருந்தால், அவர்கள் எதிர்ப்பும் கிளர்ச்சியும் எவ்வாறு தலை தூக்கும்?

* * *

"சென்னை முதன் மந்திரி ஆச்சாரியார் அதிகாரத்துக்கு வந்த நாள் முதல் தமிழ்நாட்டில் சாந்தி, சமாதானம் என்பதே அஸ்தமித்துவிட்டது! அடி, தடி, சண்டை, ஹிந்து முஸ்லிம் கலகங்கள் மலிந்துவிட்டன" என்று சொல்லுகிறார்கள். ஆம்; சு. ம. காரர் காலித்தனத்தால் மண்டைகள் உடைகின்றன; ஜன்னல்

(அடுத்த பக்கம் பார்க்க)

- சங்கநாதம் -

(முன் பக்கத் தொடர்ச்சி)

கதவுகள் தூள் தூளாகப் பறக்கின்றன. சிற்சில இடங்களில் கல்லெறிக் காலித்தனம் ஒயவில்லை. வேலூர், விருதுநகர் முதலிய இடங்களில் சு. ம. காலிகளின் அட்டூழியத்தால் சிலர் காயமடைந்ததாகவும் தெரிகிறது. சு. ம. காரர் காலித்தனத்துக்கு காங்கிரஸ் சர்க்காரோ, ஆச்சாரியாரோ என்ன செய்வார்! மெய்தான்; சு. ம. காலிகளை ஆச்சாரியார் ஆதியிலேயே மடக்காமல் விட்டது அவர்மீது பெரிய தவறு. இதை நான் அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறேன். ஆனல், ஹிந்து முஸ்லிம் கலகம் எங்கே நடந்தது? சு. ம. காரர் அதையும் தூண்டிவிடுகிருர்களா?

* * *

“ஆச்சாரியார் துடுப்பில்லாத ஓடத்தை ஓட்டிக் கொண்டு போகிருர். அவர் எந்தப் பாதாள படுகுழியில் போய் விழுகிருரோ தெரியவில்லை” யென்று சு. ம. காரர் நீலிக் கண்ணீர் வடிக்கிருர்கள். ஆச்சாரியார் ஓடம் சுமாராகவே போய்க் கொண்டிருக்கிறது; இனி மேலும் போய்க் கொண்டுதானிருக்கும். ஆச்சாரியாருக்குப் பாதாளப் படுகுழி வெட்ட எண்ணிய சு. ம. காரர் அவர்களுக்கே படுகுழி வெட்டிக் கொண்டார்கள். சு. ம. காரர் ஒட்டியது துடுப்பில்லாத ஓடம் மட்டுமல்ல; அது ஒரு ஓட்டை ஓடம்! அந்த ஓடம் மூழ்கி விட்டது; சு. ம. காரரையும் சேர்த்து அது மூழ்கடித்து விட்டது! சுயமரியாதைக் காரரும் இனிமேல் தலை தூக்க முடியாதப் பாதாளப் படுகுழியில் புதையுண்டார்கள்!

* * *

ஆச்சாரியார் ஆட்சி தமிழரை மிகமிக மோசமான நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டதாம்! தமிழர் இருப்பதா, இறப்பதாவென்ற நிலைமைக்கு வந்துவிட்டதாக சிலர் ஒலமிடுகிருர்கள். சென்னை காங்கிரஸ் சர்க்கார் ஆட்சி அவ்வளவு நிஷ்டூரமாக இல்லை. காங்கிரஸ் ஆட்சியின் பெருமை தமிழருக்குத் தெரியும். சு. ம. காரரிடம் அந்த ஆட்சியைப் பற்றி யாரும் சர்ட்பிக்கட் கேட்கவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் சு. ம. காரர் இருப்பது முடியாத காரியந்தான். அவர்கள் இருப்பதென்ருல் மரியாதையாக இருக்கவேண்டும். இன்றேல், அவர்கள் இறப்பதே நல்லது. இறப்பதும் கஷ்டம்; ஆகையால், அவர்கள் கண்ணை இறுக மூடிக் கொண்டு வங்காளக் குடாக் கடலில் விழுந்து பிராணத் தியாகஞ் செய்துகொள்ளுவது நல்லது. இன்றேல், நான் இதற்குமுன் கூறி கூறியதுபோல் தண்ணீரில்லாத காடுளுக்கு, அல்லது, தீவுகளுக்குப்போய் விடுவது உத்தமம். தமிழ்நாட்டைப் பிடித்த பீடை ஒழிந்ததென்று, தமிழர் தலை முழுகிவிட்டு, சிவனே என்றிருப்பார்கள்! தமிழ்நாட்டுக்காகவும், தமிழருக்காகவும் சு. ம. வீரர்கள் இந்தத் தியாகமாவது செய்வார்களா? உயிர்வாழ்ந்தால் மானத்தோடு, ஆண்மையோடு உயிர்வாழ வேண்டும்; கொண்ட கொள்கையைச் சாதித்து வெற்றி பெறவேண்டும். தோல்வியடைந்து, மானமிழந்து உயிர் வாழ்வதிலும், உயிரை மாய்த்துக்கொள்ளுவதே மேல். அதுவே சுத்த தமிழரின் வீரம்! சுத்த தமிழர் என்று சொல்லிக்கொள்ளும் சு. ம. காரர் அவர்கள் வீரத்தை உலகமறியச் செய்வதற்கு இதுதான் சரியான வழி; இதுவே சரியான சந்தர்ப்பம்.

* * *

தன் கண்ணிலிருக்கும் பிரமாண்டமான தூண் சு. ம. தோழர்களுக்குத் தெரியவில்லை. பிறர் கண்ணிலிருக்கும் துரும்பே அவர்களுக்குப் பிரமாதமாகத் தெரியும். சு. ம. இயக்கத்தை நேரான வழியில், நியாயமான முறையில் நடத்தத் தெரியாதவர்கள் காங்கிரஸ்மீது வீண் பழி போட்டு, காங்கிரஸ் செய்வதெல்லாம் தவறு, காந்திஜி கூறுவது யாவும் அபத்தமென்று கூறுகின்றனர். காந்தி தந்திரி, மோசக்காரர்; அவரை இந்தியர் நம்பவேகூடாது; அவரை காங்கிரசிலிருந்து வெருட்டிவிட வேண்டுமென்றெல்லாம் பிதற்றுகின்றனர். காங்கிரசிலிருக்கும் பெரும்பான்மையோர் காந்தி பித்தர்களாம்! காந்தி “வெள்ளைக் காக்காய் பறக்கிறதென்று சொன்னல், ஆம்” மெய், நானும் பார்த்தேன்!” என்று சொல்லக்கூடியவர்களே காங்கிரசில் மலிந்திருக்கிருர்களாம்! இந்த மதிமயக்கம் தொலைந்தாலொழிய காங்கிரஸ் ஒருபோதும் உருப்படாது; காந்திஜியின் கோரிக்கைக்கு இணங்காத சுபாஷ்பாபுவை காந்திஜி அடியோடு பணியவைத்து விடுவார்; காந்திஜி அவ்வளவு பெரிய தந்திரசாலி, மோசக்காரர், பழிவாங்கும் சுபாவமுடையவரென்றெல்லாம் சு. ம. தலைவர்கள் சுதறுகின்றனர். சு. ம. பத்திரிகைகளும் சுபாஷ்பாபுவுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். காந்திஜியின் பெருமை என்னவென்பது இந்திய மக்களுக்குத் தெரியும். உலக மக்கள் எல்லோருக்கும் தெரியும். காந்திஜிமீது சதா வசை பாடிக் கொண்டிருக்கும் சு. ம. காரர் காந்திஜியின் சக்தியை அறியமாட்டார்கள். அறிந்திருந்தாலும் அதை மனம் விட்டுச் சொல்லவே மாட்டார்கள். அவர்கள் மனமே அவர்களை வாட்டி வதைக்கட்டும். சு. ம. காரர் நினைப்பதுபோல், அல்லது, கூறுவதுபோல் காந்திஜி மோசக்காரர் அல்ல; அல்லது, அவர் பழிவாங்கும் சுபாவமுடையவருமல்ல. “வெள்ளைக் காக்காய் பறக்குகிறது!” என்று பொய் சொல்லும் அயோக்யரல்ல. அவர் சத்தியவந்தர்; அஹிம்சா மூர்த்தி. காந்திஜியைக் குறைகூறும் சு. ம. காரருக்கே புளுகுவதும், புரட்டுவதும் வழக்கம்; அது அவர்களுக்கு உடன் பிறந்த குணம். ஒன்றுமில்லாத ஹிந்தியைக் காட்டி, ‘‘தமிழுக்கு ஆபத்து! தமிழ் நாடுக்கு ஆபத்து!” என்று வெள்ளைக் காக்காய் மூட்டை கட்டி விட்டார்கள்! அந்த மூட்டையைத் தமிழர் நம்புவார்களென நினைத்தார்கள். ஆனல் ஏமாற்றமடைந்தனர். தமிழரை கொக்கென நினைத்துக் கும்மாளம் போட்ட அவர்கள் ஆணவம் ஒடுங்கியது. அந்த வயிற்றெரிச்சலைக் காந்திஜிமீதும், காங்கிரஸ்மீதும் கொட்டித் தொலைக்கிருர்கள்.

* * *

காந்திஜி, சுபாஷ் பாபுவைப் பழிவாங்கவில்லை. அவருடைய உதவியைத் தேடிய சுபாஷ்பாபுவுக்கு உதவிச் செய்தார்; யோசனை கூறினர். சுபாஷ் பாபு அவருடைய திட்டத்தைக்கொண்டு சுதந்திரமாகக் காங்கிரசை நடத்திச் செல்ல ஆசிர்வதித்தார். காந்திஜியே காங்கிரசின் சர்வாதிகாரி யெனக் கூறுகிருர்கள். காந்திஜி, சுபாஷ் பாபுவுக்கு ஆலோசனைகளை கூறியதைக் கவனிக்க வேண்டும். சுபாஷ்பாபுவுடன் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் ஒத்துழைக்க மறுத்தால் அது காந்திஜி குற்றமா? குற்றம் சுபாஷ்பாபுவுடையது. அவர் காரியக்கமிட்டியினர்மீது அபாண்டமான பழி சுமத்தினர். இந்தப் பழியை ஜவார்லால் கூட வெறுக்கிருர். சுபாஷ்பாபு கூறியதைக் கண்டித்திருக்கிருர். சுபாஷ் பாபு பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று சொல்லுகிருர். காந்திஜிமீது பழி போடும் சு. ம. மண்டுகள், பண்டித ஜவார்லால் அறிக்கையை ஒரு முறைக்குப் பன்முறை படித்துப் பார்ப்பார்களாக. அப்பொழுதுதான் அவர்கள் துவேஷப்புத்தி தெளிவடையும்.

* * *

சு. ம. தலைவர்கள், அவர்கள் இயக்கத்தை வலுப்படுத்தவும், தமிழர் ஆதரவைப் பெறவும் என்னமெல்லாமோ குட்டிக்கரணம் போட்டுப் பார்க்கிருர்கள். செப்படி வித்தைகளெல்லாம் செய்கிருர்கள். ஆனல், பாவம்! அவர்கள் சு. ம. இயக்கம் பாதாளப் படு குழியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறதேயொழிய, அதற்குக் கதி மோட்சம் இல்லை. சு. ம. இயக்கப் பிரம்மாவை 2½ கோடி தமிழர் பிரதிநிதி யென்றும், உலகப் பெரியாரென்றும், மிக மிகப் “பெரிய மகாத்மா” வென்றும் வர்ணிக்கிருர்கள். அவர் எந்தத் தமிழருக்குப் பிரதிநிதியோ அந்த ரகசியம் சு. ம. காரருக்குத்தான் தெரியும். அவர் சு. ம. தமிழர் பிரதிநிதியாக இருக்கலாம்; அதை யாரும் மறுக்கவில்லை. ஆனல், 2½ கோடி தமிழர் பிரதிநிதியென்று நாக்கில் நரம்பில்லாமல் கூறுவதை எந்தத் தமிழனும் ஏற்றுக் கொள்ளவே மாட்டான். போகட்டும், 2½ கோடி தமிழர் பிரதிநிதி யென்று கூறும் ராமசாமி நாயக்கருக்கு, அவருடைய சொந்த ஊராகிய ஈரோட்டில் மதிப்புண்டா! அங்கு அவரை எத்தனை பேர் மதிக்கிருர்களென்று சு. ம. காரர் விரல்விட்டுக் கூற முடியுமா? முடியாது. தமிழ் நாட்டில் ராமசாமி நாயக்கருக்கு எந்தவிதமான செல்வாக்கு இருக்கிறதென்பதை நானறிவேன். அதை சு. ம. காரர் கூறித் தெரிந்துகொள்ளவேண்டியதில்லை.

* * *

ராமசாமி நாய்க்கர் ஜாதித் துவேஷத்தைக் கிளப்பிவிட்டு, சர்க்காரை முறைகெட்ட வழியில் எதிர்த்து வந்ததால், அவர் தற்போது சிறையிலிருக்கிருர். சென்னை சிறையிலிருந்தபோது அவருக்கு அடிக்கடி வயிற்றுவலி ஏற்பட்டதாகத் தெரிகிறது. அவரை சர்க்கார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய், ஒருமுறையல்ல, 10 முறை எக்ஸ்-ரே சோதனை செய்து பாாத்தார்கள். அவர் வயிற்றில்கட்டியோ, புண்ணோ எதுவுமில்லை. அவர் வயிறு பெருத்திருப்பதால், குடல் பலீலனமாக இருக்கிறது. சாப்பிட்டபின், ஜீரணம் ஏற்படும்போது, குடல் பலவீனத்தால் வயிற்றுவலி ஏற்படுகிறதென டாக்டர்கள் அபிப்ராயப்பட்டார்கள். இது சு. ம. தலைவர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. டாக்டர்களுக்கு அனுபவம் போதாது; அவர்கள் நிபுணர்களல்ல; பெரிய டாக்டர்களைக்கொண்டு பரிசோதிக்கவேண்டுமெனச் சிபார்சுசெய்கிருர்கள். டாக்டர்கள் அனுபவமில்லாமலிருக்கலாம் அல்லது, நிபுணர்களாக இல்லாதிருக்கலாம். ஆனல் ராமசாமி நாயக்கரைப் பரிசோதிக்க உபயோகித்த எக்ஸ்-ரே இயந்திரத்துக்கும் நிபுணத்துவம் இல்லையா? இயந்திரம் வயிற்றில் உள்ளதைத் தானே எடுத்துக் காட்டும். சு. ம. காரர் போடும் கூச்சல் அர்த்தமற்ற கூச்சல்.

* * *

நாயக்கருக்கு பாரிச வாய்வும் உண்டு. அவருக்குச் சர்க்கார் ஒரு புதிய பெல்ட்டும் கொடுத்து, அவர் தேக நிலைமையை உத்தேசித்து, அவரைப்பெல்லாரி சிறைக்கு மாற்றியிருக்கிருர்கள். இதைக்கண்டு சு. ம. பத்திரிகைகள் பெரிய ஒப்பாரிவைக்கின்றன. சு. ம. காரரையும், சு. ம. பத்திரிகைகளையும்விட நாயக்கரிடம் ஆச்சாரியாருக்கு அன்புண்டு. விசுவாசமும் உண்டு. நாயக்கர் தேக நிலைமையைப் பாதுகாக்க அவருக்குத் தெரியும். சு. ம. காரர் காரணமில்லாமல் ஓலமிடுவது வெறும் வேஷமென்றுதான் சொல்லவேண்டும். நாயக்கரைப் பெல்லாரி சிறைக்கு மாற்றியது சென்னை மக்களுக்குப் பெரிய ஏமாற்றமாகிவிட்டதென்றும், சென்னை மக்கள் மனம் உடைந்து போயிற்றென்றும், சென்னையெங்கும் ஒரே பரபரப்பாக இருக்கிறதென்றும் சு. ம. பத்திரிகைகள் ஏதோ பிரமாதமாக எழுதியிருக்கின்றன. சென்னையிலும், தமிழ்நாட்டிலும், சு. ம. காரருக்கும், நாய்க்கருக்கும் அவ்வளவு உயர்ந்த செல்வாக்கு இருப்பதாக அவை கற்பனை செய்துகொண்டன. இது வெறும் ஆர்ப்பாட்டம். தமிழரை ஏமாற்றும் ஒரு ஜால வித்தை! சென்னை மக்களுக்கு சு.ம.வைப் பற்றியோ, ராமசாமி நாயக்கரைப் பற்றியோ சிந்தனையே கிடையாது. அவரைப் பற்றி ஒரு பேச்சைக் கூடக் கேட்கமுடியாது. சு. ம. காரர் பொய்ப் பிரசாரத்தையும், இது

(அடுத்த பக்கம் பார்க்க)



லிம்டி சமஸ்தானத்தில், சமஸ்தானக் கொள்ளைக்காரர் சமஸ்தான மக்களைக் கொள்ளையடித்ததோடு, ஈட்டிகளால் குத்தியும், கத்திகளால் வெட்டியும் காயப்படுத்தினர். காயம்பட்டவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

சங்கநாதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

போன்ற கண் கட்டி வித்தைகளையும் கண்டு தமிழர் ஏமாந்துவிட வேண்டாம். சு. ம. இயக்கம் உச்சி நிலையிலிருப்பதாகவும் நினைக்கவேண்டாம்.

* * *

மற்றொரு வேடிக்கை! நாயக்கரை விடுதலை செய்யாவிட்டால், ஆச்சாரியார் வீட்டின்முன் மறியல் செய்யப் போவதாக ஒரு தமிழ்த் தாய் சமீபத்தில் பேசினர். அவர் பேசியது தான் ஆபத்து. சு. ம. பத்திரிகைகள் இப்படிப்பட்ட தருணத்தைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தன. அந்தத் தமிழ்த் தாய் பேசியதைப் பிடித்துக்கொண்டு, பேசிய தாயை வானமளாவ உயர்த்திவிட்டன. அந்தத் தாய் மறியல் செய்ய உறுதி கொண்டுவிட்டார்; அவரை யாராலும் தடுக்க முடியாதெனத் தூக்கிவிட்டது. பாவம்! மறியல் செய்யப் போகாவிட்டால் கேவலம்; போனால் சிறைவாசம். சிறையை நினைக்கும்போதே பயம். இருதலைக் கொள்ளி எறும்பு போல தமிழ் தாய் தவிப்பதாகத் தெரிகிறது. சு. ம. காரர் அவர்கள் இயக்கத்துக்கு ஆதரவு தேடுவதற்கு இதை ஒரு கருவியாக உபயோகித்து வருகிறார்கள். தொண்டர்களையும், தாய்மார்களையும் தட்டிக் கொடுத்து, அவர்களை மறைமுகமாகத் தூண்டிவிட்டால், மானத்துக்கு அஞ்சியாவது அவர்கள் சு. ம. காரர் வழிக்கு வந்தே தீருவார்கள். ஆச்சாரியார் வீட்டின்முன் மறியல் செய்யப் போவதாகக் கூறிய தமிழ் தாயின் நிலைமைகூட இப்பொழுது பரம சங்கடமான நிலைமையில் வந்திருக்கிறது. மறியல் செய்துதான் தீர வேண்டும்; மறியல் செய்யாவிட்டால் மானம் போய்விடும். சு.ம. பத்திரிகைகள் சும்மா விடா. சு. ம. காரரும் அந்தத்தாயை இனிமேல் மதிக்கமாட்டார்கள். இதற்குப் பயந்தாவது மறியல் செய்துதானகவேண்டும். இது நல்ல தந்திரமான வேலையல்லவா?

* * *

ராமசாமி நாயக்கருக்குக் கிடைத்திருக்கும் பவிசு, அவரைப்படைத்த பிரம்மாவிற்குக்கூடக் கிடைத்திருக்காது. சிறையில் நல்ல கவனிப்பு. ஆகாரத்துக்கு குறைவில்லை. டாக்டர்கள் அடிக்கடி அவரைச் சோதித்து வருகிறார்கள். சிறையில் முதல் வகுப்பு; பெல்லாரி போக ரயிலில் இரண்டாம் வகுப்பு. மோட்டார் சவாரி! இதைவிட வேறு என்ன வேண்டும்? அவருடன் சிறை சென்றிருக்கும் சு. ம. தொண்டர்களுக்கு இந்தப் பவிசு கிடைத்திருக்கிறதா? இல்லை. மற்றவர்கள் 3-ம் வகுப்புக், கடுங்காவல் தண்டனை அனுபவிக்கும்போது, நாயக்கர் மட்டும் ஏன் சிறையில் சொகுசாகக் காலந் தள்ளவேண்டும்? அவருக்குக் கிடைத்திருக்கும் சௌகரியங்களை வேண்டாமென உதறித் தள்ளிவிட்டு, இதர தொண்டர்களைப் போல் அவரும் சிறையில் ஏன் கஷ்டப்படக் கூடாது. அவர் அவ்வாறு கஷ்டப்பட்டிருப்பாரேயானல், நாயக்கரைப் பன்மடங்கு வாழ்த்தியிருப்பேன். அவரை ஒரு சிறந்த தலைவராகவும் போற்றியிருப்பேன். ஆனல், இப்பொழுது நாயக்கர் அவ்வளவு தூரம் போற்றுவதற்கு உரியவரல்லர். தமிழைப் பாதுகாக்கப் போவதாக மார் தட்டி வெளியில் வந்த நாயக்கர் வீட்டில் கன்னடமே பேசுவாராம்! இப்பேர்ப்பட்ட சுத்த வீரசூரத் தமிழர், தமிழையும், தமிழ் நாட்டையும் பாதுகாக்க முன்வந்திருப்பது விசித்திரமல்லவா? இந்தக் கன்னடம் நாயக்கரே சுத்த தமிழராம்! 2½ கோடித் தமிழருக்குப் பிரதிநிதியாம்! இவரும் இவர் தோழர்களும் எப்படித் தமிழ் நாட்டைப் பாதுகாக்கப் போகிறார்களோ, கடவுளுக்கே வெளிச்சம். சு. ம. தலைவர் வண்டவாளத்தையும், அவர் சிஷ்யரின் யோக்யதைகளையும் தமிழர் இதற்குள் நன்றாக அறிந்திருப்பார்களென்றே நினைக்கிறேன். இதற்கு உதாரணமாக, இப்பொழுது ஒரு சாகிப் புறப்பட்டிருக்கிறார். அவர் பழைய கருப்பன்! காஞ்சிவரத்தில் ஒரு சு. ம. கூட்டத்தில் பேசிய போது, "உச்சிக் குடுமியில் தமிழர் குடுமி மாட்டிக்கொள்ளக்கூடாதென்பதே எனது ஆவல்!" என்றார். இப்படிப் பேசியவருக்குக் குடுமி உண்டா? கிடையாது. சரியான மொட்டைத் தலை. ஆனல், தாடியுண்டு. அந்தத் தாடியில் தமிழர் குடுமி மாட்டிக்கொள்ளக் கூடாதென்பதே எனது கவலை. இந்தத் தாடிகளையும், நயவஞ்சகர் வார்த்தைகளையும் நம்பி மோசம் போனவர்கள் பலர். தமிழர் இனிமேலாவது எச்சரிக்கையாயிருப்பார்களாக.

புதிய
மோரிஸ் "8"

உலகிலேயே புகழ்பெற்ற சிறிய மோட்டார்களில் புது ரகமான அழகிய மோட்டார்.

மோரிஸ் "8" கார்கள் எங்கு மிருக்கின்றன. நகரங்களிலும், கிராமங்களிலுமுண்டு. சிறு கார்களில் சிறந்த கார் அதுவே என்ற நம்பிக்கை எல்லோருக்குமுண்டு. எல்லோரும் அதை அங்கீகரிக்கிறார்கள். 2,00,000 கார்களுக்கு மேலதிகமாகச் செய்து விற்பனை செய்திருக்கின்றனர். ஆனல், இப்பொழுது மோரிஸ் "8" தான் இவ் வருட மாடல். ஒரு சிறிய காருக்கு என்னென்ன அம்சங்கள் இருக்கவேண்டுமென விரும்புகிறீர்களோ அந்த அம்சங்களெல்லாம் இந்த காரில் உண்டு.

போதிய இடவசதியுண்டு. உண்மையில் மோரிஸ் "10" போல் பெரியதாகவும் இடவசதியுள்ளதாகவு மிருக்கிறது. சாமான்கள் வைத்துக்கொள்ள பெரிய பெட்டியுண்டு. காருக்கு 4 வாசல்களுமுண்டு. காரில் வேலை செய்யும் ஸ்பிரிங்குகள் ஆச்சரியப்படக்கூடியவை. மோசமான ரோடுகளிலும் அருமையாக வேலை செய்யும். 4 ஜியர் பாக்ஸ்கள் உண்டு. அவை சப்தம் செய்யா. திறமையான இஞ்சின்; அதிகமாகப் பெட்ரோல் விரயமாகாது.

இந்தக் காரை புகழ்ந்து கூற ஒரே வழிதானுண்டு. ரோடில் ஓடும் கார்களில் "8" தான் சிறந்தது.

நான்கு கதவுகளுள்ள சலூன்களும், டூரர்களும் உண்டு.

அடிசன் அண்டு கம்பெனி, லிமிடெட்., மதராஸ் அண்டு பிராஞ்சுகள்.



—: தமிழ் நாட்டிற்கு அதிகாரம் பெற்ற ஜில்லா டீலர்கள் :—

Av. A. செண்பக நாடார், ஸ P. V. P. வாலசுப்பிரமணிய நாடார், மதுரை ஸ திருநெல்வேலி.

பழனியப்பா ஸ சன்ஸ், காரைக்குடி.

தி மாடர்ன் மோட்டார் ஸ ஜெனரல் டிரேடிங் கம்பெனி, தஞ்சாவூர்.

கீழ்க்கண்டவர்களிடமிருந்து காலண்டர் வரப்பெற்றோம்.

சொ. அருணசலம் செட்டி,
பெரியகடை வீதி,
திருச்சினப்பள்ளி.

இந்தியன் ரிலீப் பாங்கு லிமிடெட்,
5, கிடங்கு தெருவு, மதருஸ்.

மேட்டி சுதேசி பனியன் கம்பெனி,
பரமக்குடி.

C. சுவாமிநாத முதலியார்,
ஸ பிரதர்ஸ், கரூர். (S. I. R.)

குமாரவிகடன் காஞ்சிபுரம்.

மதருஸ் டைப் பௌண்டரி,
மதருஸ்.

தமிழ் மணி

சென்னை—வேகுதானியவூ மாசிமூ 15உ (26—2—1939)

கால்துட்டுக் குதிரை!

கால் துட்டுக்குக் குதிரை வாங்கவேண்டும்; அது காற்ருகப் பறக்கவும் வேண்டும்! அந்தக் குதிரையோ புல்லுந் தின்னக்கூடாது; தண்ணீருங் குடிக்கக் கூடாது! இந்தக் குதிரையைப் போலவே காங்கிரஸ் மந்திரி சபையும், அவர்கள் நிர்வாகமும் நடக்கவேண்டுமெனக் காங்கிரஸ் விரோதிகள்எதிர்பார்க்கிருர்கள். இது சாத்தியமா ஒருபோதும் சாத்யமில்லை. காங்கிரஸ் சர்க்கார் அதிகாரத்துக்கு வந்தபின் ஏழை மக்களுக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிருர்கள். மதுவிலக்குச் சட்டம், விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் போன்ற பல நன்மையான சட்டங்களைச் செய்திருக்கிருர்கள். விவசாயிகளின் வரியைக் குறைத்து வரிவஜா செய்திருக்கிருர்கள்.

சர்க்கார் வருமானம்

சர்க்கார் வருமானத்தில் பாதி விவசாயிகளிடமிருந்தே வருகிறது. மூன்றில் ஒரு பங்கு கலால் இனத்திலிருந்து கிடைக்கிறது. சர்க்கார் மதுவிலக்கை மூன்று ஜில்லாக்களில் அமுலுக்குக்கொண்டு வந்திருக்கிருர்கள். அடுத்த அக்டோபர் மாதத்திலிருந்து வடஆற்காடு ஜில்லாவிலும் மதுவிலக்கை அமுலுக்குக்கொண்டு வரப்போகிருர்கள். அப்படியானல், இந்த மதுவிலக்கால் சர்க்காருக்குச் சுமார் 65 லக்ஷம் ரூபாய் வருமானத்தில் குறைவு ஏற்படும். மேலும், இவ்வருடம் எதிர்பாராதவிதமாக சர்க்காருக்குப் பலவிதத்திலும் நஷ்டமேற்பட்டது; பல இடங்களில் பஞ்சமேற்பட்டது. சர்க்கார் எதிர் பார்த்த வருமானம் போய், சர்க்கார் பஞ்ச நிவாரண ஏற்பாடுகள் செய்யவேண்டியதாயிற்று. விவசாயிகளுக்கு வரி வஜாவும் செய்திருக்கிருர்கள். இன்னெரு சர்க்காராக இருந்திருக்குமேயானல், ஏழைகளின் கஷ்டத்தை பொருட்படுத்தியிருக்கவே மாட்டார்கள். காங்கிரஸ் சர்க்கார், ஏழைகளின் நலன் ஒன்றையே கருத்தில்கொண்டிருப்பதால் பல கஷ்டங்களுக்கிடையே சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தைச் சமாளித்துக்கொண்டுபோக வேண்டியிருக்கிறது.

மந்திரிகள் சிக்கனம்

காங்கிரஸ்மந்திரிகள் வெகு சிக்கனமாகக் காரியங்கள் செய்து கொண்டு வருகிருர்கள். இதர மந்திரிகளைப் போல், காங்கிரஸ் மந்திரிகள் மாதமொன்றுக்கு 3000, 4000 ரூபாய் ஏப்பம்விடவில்லை. ஒரு மந்திரிக்குச் சம்பளம் 500 ரூபாய்தான். இதர செலவுகளெல்லாம் சேர்த்து மாதமொன்றுக்கு 800 ரூபாய்க்கு மேல் போவதில்லை. அதிலும், சென்னை முதன் மந்திரியும், போக்கிஷ மந்திரியுமாக இருக்கும் ராஜகோபாலாச்சாரியாரோ கடுஞ் செட்டு; அநாவசியமாக ஒரு தம்பிடியும் செலவு செய்யமாட்டார். இந்த மந்திரிகளை இன்னமும் செட்டாயிருந்து, கால் துட்டுக் குதிரை வாங்கி அதைக் காற்ருகப் பறக்கும்படி செய்யவேண்டுமென வற்புறுத்துவது அநியாயமே யாகும். காங்கிரஸ் மந்திரிகளின் கஷ்டங்களை நன்கு அறிந்து கொள்ளாத வர்களே அவ்விதம் வற்புறுத்துவார்கள். மது விலக்கு எதற்கு? அது சாத்யமா? அதைக்கை விட்டுவிடவேண்டும்; கடன் நிவாரணச் சட்டம் பலன் தராது. அதையும் தலைமுழுகிவிட வேண்டுமென எதிரிகள் விதண்டா வாதம் பேசலாம். ஆனல், காங்கிரஸ் மந்திரிகள் எதிரிகளுக்கு ஒருபோதும் விட்டுக்கோடுக்கப் போவதில்லை. காங்கிரஸ் மந்திரிகள் அவர்கள் கோள்கையைப் பின்பற்றியே தீருவார்கள். அவர்கள் வோட்டர்களுக்குக் கோடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியே தீரவேண்டும். அதனுல், அவர்கள் மந்திரி பதவிகள் போனுலும் பாதகமில்லை. வேறு மந்திரிகள் அப்படி நினைக்கலாம். காங்கிரஸ் மந்திரிகளிடம் அதை எதிர்பார்க்கவே வேண்டாம்.

வரவு-செலவு

சென்னை முதன் மந்திரி 1939-40-ம் வருட வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பித்திருக்கிருர் இவ் வருடம், வரவை விட செலவு அதிகம். ரூபாய் 17½ லக்ஷம் துண்டு விழுகிறது. வருமானம் 16,23,45,000 ரூபாய்; செலவு 16,40,72,000 ரூபாய். வருமானம் குறைந்துவிட்டதால், சர்க்கார் 1½ கோடி ரூபாய் கடன் வாங்கத் தீர்மானித்திருக்கிருர்கள். சர்க்கார் ஏற்கனவே 4½ கோடி கடன் வாங்கியிருக்கிருர்கள். இவ்வருடம் மேலதிகமாக 1½கோடி ரூபாய் கடன் வாங்குவதை எதிர் கட்சியினர் கண்டிக்கின்றனர். கடன் வாங்குவது காங்கிரஸ் சர்க்காருக்கு வழக்கமாகிவிட்டதென்று கூறுகிருர்கள். கடன் வாங்கித்தான் தீரவேண்டியிருக்கிறது. அதற்காக சர்க்கார் நிர்வாகத்தை விட்டு விடுவதா?

புதிய வரிகள்

காங்கிரஸ் சர்க்கார் வரவுக்குத் தகுந்த செலவைச் சரிகட்ட முயன்றும் முடியாது போயிற்று. சென்றவருடம் ஆச்சாரியார் வெகு சாமர்த்தியமாக நிர்வாகத்தை நடத்தியிருக்கிருர். இவ்வருடம் அதிக வருமானத்துக்கு வழி தேடப் புதிய வரிகள் விதித்திருக்கிருர். அந்த வரிகள் பெரும்பாலும் பணக்காரரிடமிருந்து வசூலாகுமேயொழிய, ஏழைகளுக்கு அந்தப் புதிய வரிகளால் தொல்லை இருக்காது. மின்சார விசை வரி, பெட்ரோல்வரி, புகையிலை வரி, தமாஷா வரி, விற்பனை வரி முதலிய பல பது வரிகளை விதிக்கச் சர்க்கார் யோசித்திருக்கிருர்கள். மது விலக்கால் வருமானம் குறைந்து கொண்டு போவதால் . சில இனங்களில் வருமானத்துக்கு வழிதேட வேண்டியது அவசியமாகிறது. அதற்காகக் காங்கிரஸ் சர்க்காரைக் குறை கூறுவதில் பயனில்லை. எதிர் கட்சியில் சில குதர்க்க வாதிகள் சர்க்கார் போக்கை எதிர்க்கின்றனரே யொழிய நியாய வாதிகளும், பரந்த நோக்கமுடையவர்களும், சர்க்கார் நிர்வாகத்தில் அனுபவம் பெற்றவர்களும், ஆச்சாரியார் வரவு-செலவு திட்டத்தைப் பாராட்டியே இருக்கிருர்கள். ஒரு ஏழை விவசாயிக்கு ஒரு சேன்ட் விஸ்தீரணமுள்ள நில மிருந்தாலும் அதற்குத் தீர்வை கட்டியே தீரவேண்டும். அவ்வாறிருக்கப் பணக்காரரும், வர்த்தகர்களும், பல ஆயிரக்கணக்காக வியாபாரஞ்செய்து, ஏராளமான லாபந்தேடும்போது அவர்கள் லாபத்தில் ஒரு பகுதியை சர்க்காருக்குக் கொடுப்பது நீதியேயாகும். காங்கிரஸ் சர்க்கார் அநியாயமாக வரிபோடுகிருர்கள், காங்கிரஸ் சர்க்காரால் மக்கள் கண்ட பலன் இதுதானென்று குறைகூறுவது சரியல்ல.பணக்காரர், அவர்கள் வருவாயில், அல்லது, அவர்கள் சுகபோகத்துக்காகச் செலவிடும் தோகையில் ஒரு பகுதியை ஏழைகளுக்குத் தியாகஞ் செய்வது நியாயம். அவ்விதியாகத்தையும் அவர்கள் மனமுவந்து செய்யவேண்டும். கால் வயிற்றுக் கஞ்சிக்கும் காற்ருகப் பறக்கும் கோடிக் கணக்கான மக்களுக்கு ஒருவேளை உணவு கோடுக்கவும், உடை அளிக்கவும், குந்தியிருக்கக் குடிசை கோடுக்கவுமே காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்டது. காங்கிரஸ் சர்க்கார் ஏழைகளுக்கு நிவாரணந் தேட முயற்சி செய்து வருகிருர்கள். சர்க்கார் முயற்சிக்குப் பணக்காரரும் சந்தோஷமாக உதவியளிப்பதே நல்லது. அதுவே சிறந்த தர்மமாகும்.

யார் குற்றம்?

சர்வதேச சங்கத்திலிருந்து இந்தியா விலகிவிட வேண்டுமென்ற தீர்மானம் இந்திய சட்டசபையில் நிறைவேறி விட்டது. உருப்படாத இந்த சர்வதேச சங்கத்துக்கு, இந்தியா வருடந்தோறும் பல லக்ஷக்கான ரூபாயைக் கோட்டி விரையஞ் செய்ய வேண்டியிருந்தது. சர்வதேச சங்கம் கையாலாகாதது; அதற்குக் கோடுக்கும் பணம் வீண் தண்டமேன இந்தியர் கூறினல், பிரிட்டிஷார், சர்வதேச சங்கமே உலக சமாதானத்துக்கு ஊற்று என்று கூறிவந்தார்கள். இதே சர்வதேச சங்கத்தை இன்று கையாலாகாத சங்கமேனப் பிரிட்டிஷ் முதன் மந்திரி சேம்பர்லேன் கூறுகிருர்.

பிரிட்டிஷ் துரோகம்!

சர்வதேச சங்கத்தை இன்று இந்நிலைமைக்குக் கோண்டுவந்தது யார்? பிரிட்டிஷாரேன்றே சோல்லலாம். பிரிட்டிஷாருக்கு அடுத்தபடியில் பிரான்சை வைக்கலாம். இந்த இரு நாடுகளும் சர்வதேச சங்கத்தை அவைகளின் சோந்தச் சோத்தேன மதித்து, அதை அவர்கள் இஷ்டம் போல் ஆட்டிவந்தார்கள். இதனல், ஜேர்மனி, ஜப்பான், இதாலிபோன்ற வல்லரசுகள் சர்வதேச சங்கத்திலிருந்து விலக நேர்ந்தன. அந்நாடுகள் விலகியதோடு விட்டுவிடவில்லை; சர்வதேச சங்கத்தையே வெறும் சங்கமாக மதிக்கவும் முற்பட்டன. சர்வதேச சங்கத்தின் தீர்ப்பைக் கூட அவை துட்சமாக மதித்துத் தள்ளின. சர்வ தேச சங்கம் கையாலாகாத சங்கமாக உருக்குலைந்து, இன்று, தேடுவாரின்றி இருப்பதற்குப் பிரிட்டிஷாரே காரணம். பிரிட்டிஷ் முதன் மந்திரி சேம்பர்லேன் சர்வ தேச சங்கத்தைக் கையாலாகாத சங்கமேன்று கூறியதோடு, அதற்குக் காரணம் யாரேன்பதை விளக்கிக்கூறியிருந்தால் நலமாயிருந்திருக்கும். பிரிட்டிஷாரின் எடுப்பார் குழந்தையாக இருந்த சர்வ தேச சங்கத்துக்கு இனி சாவு மணி அடிக்கவேண்டியதுதான்!

அழகிய மூளை!

காந்திஜி வகுத்த வார்தா கல்வித் திட்டத்தைப் பல கல்வி நிபுணர்கள் பாராட்டியிருக்கிருர்கள். அந்நிய தேசங்களில்கூட அந்தக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கோண்டுவந்து பரீட்சித்துப் பார்த்து வருகிருர்கள். வார்தா திட்டத்தைக் காந்திஜி இந்தியருக்கேனவே வகுத்தார். அப்படி இருந்தும், அதைச் சில இந்தியர் எதிர்த்துக் குறை கூறுவது வருந்தத்தக்கது.

சர்க்கார் ஆதரவு

வார்தா கல்வித் திட்டத்தை இந்திய சர்க்கார்கூட ஏற்றுக் கோண்டதாக இப்பொழுது செய்தி கிடைத்திருக்கிறது. சில கல்வி நிபுணர்கள் காந்திஜியை நேரில் கண்டு, அத்திட்டத்தைப் பற்றிக் கலந்து ஆலோசித்து வந்தனர்; இந்திய சர்க்காரும் பல கல்வி அதிகாரிகளும் அந்நியதேச நிபுணர்களும் காந்தி கல்வித்திட்டத்தை ஏற்றுக்கோண்டிருக்கும்போது, தேன்னுட்டிலுள்ள சில சுயமரியாதைப் பிரகஸ்பதிகள், காந்திஜி திட்டத்தை எதிர்த்து, அது பார்ப்பன திட்டம், பார்ப்பனீயத்தைத் திணிக்கவே

(அடுத்த பக்கம் பார்க்க)

மணியோசை



ராஜகோபாலாச்சாரியார்,
சென்னை.

முதன் மந்திரியே,

அண்ணாமலை சர்வ கலா சாலை மாணவர்களிடையே ஏற்பட்டிருக்கும் கொதிப்பு உங்களுக்குத் தெரியும். சில மாணவர்கள் உண்ணாவிரத மிருந்தார்கள். உங்கள் வேண்டுகோளுக்கிணங்கி உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொண்டார்கள். என்றாலும், அண்ணாமலை சர்வ கலா சாலை வைஸ் சான்ஸலரான சீனிவாச சாஸ்திரியார்களின் மனம் இரங்கவில்லை. தள்ளாத வயதில்கூட அவர் பிடிவாதம் தளரவில்லை. சாஸ்திரிகள் பெரிய பேச்சாளி; அறிவாளி; உங்களுக்குச் சமமான ராஜதந்திரி. அப்பேர்ப்பட்ட ஒருவர் சில மாணவர்கள் விஷயத்தில் பிடிவாதங் காட்டுவது விசித்திரமாக இருக்கிறது. சாஸ்திரியாரின் பெருமையை மாணவர்கள் முன்னிலையில் பாராட்டிப் பேசிய நீங்கள், அண்ணாமலை மாணவர் விஷயத்தில் அவர் பிடிவாதம் காட்டியதை ஏன் கண்டிக்கக் கூடாது? அல்லது, நண்பர் என்ற முறையில், சாஸ்திரிகளிடம் மாணவர்களுக்காக நீங்கள் ஏன் பரிந்து பேசக்கூடாதென்று கேட்கிறேன். நீங்கள் மனம் வைத்தால், சாஸ்திரிகளை வழிக்குக் கொண்டுவந்து விடலாம். சாஸ்திரிகள் இரண்டு மாத ரஜாவில் வந்திருப்பதாகக் கேள்வி. அண்ணாமலை மாணவர் சம்பந்தமாகச் சாஸ்திரிகளைக் கண்டு, மாணவர்கள் தகராறை இலகுவில் தீர்த்து வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சென்னை பட்ஜெட், உங்கள் மூளைக்கு அபார வேலை கொடுத்திருக்குமென்பது எனக்குத் தெரியும். பட்ஜெட் வெளிவந்து விட்டது. உங்கள் மூளைக்கும் சிறிது ஓய்வு கிடைத்திருக்கும். அந்த ஓய்வு நேரத்திலாவது மாணவர்களுக்காக இந்தச் சிறு கைங்கர்யத்தைச் செய்து வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

டிங்—டாங்

எஸ். சத்தியமூர்த்தி ஐயர்,
புது-டில்லி.

மூர்த்திகளே,

இந்திய சட்ட சபையில் ரயில்வே வரவு-செலவு திட்ட விவாதத்தின்போது, சர்க்காருக்கும், வகுப்புவாத ஜின்னாக்களுக்கும் நீங்கள் கொடுத்த சூடு சரியான சூடு. "தேச சுதந்திரமே காங்கிரஸ் நோக்கம்; அந்நியரை வெளியே விரட்டிவிட்டபின் சர்க்கார் பெஞ்சுகளில் முழுவதும் ஜின்னாக்களாகவும், ரயில்வே போர்டு முழுவதிலும் ஜியாதீன்களாகவும் இருப்பதை நாங்கள் ஆட்சேபிக்க மாட்டோம். இந்தியரல்லாதவர்களை நம்ப வேண்டாம். சமஸ்தான மன்னர்களிடமோ, இந்திய சர்க்காரிடமோ நம்பிக்கை வைக்கவேண்டாம்" என்று நீங்கள் சுட்டிக் காட்டியது சர். என். என். சர்க்காருக்கும், ஜின்னாவுக்கும் நறுக்கென குத்தியிருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனால், உங்கள்வார்த்தைகள் இதர முஸ்லிம்களுக்காவது ஓரளவு திருப்தியை உண்டுபண்ணியிருக்குமென்று நினைக்கிறேன். காங்கிரஸ் நோக்கத்தை நீங்கள் தெளிவுபட பேசியதற்கு எனது நன்றி.

டிங்—டாங்

சர். என். என். சர்க்கார்,
புது-டில்லி.

பரம ராஜ பக்தரே!

நீங்கள் பரம ராஜ பக்தர்களாக இருங்கள். அதை யாரும் ஆட்சேபிக்கவில்லை; தட்டிக் கேட்கவுமில்லை. உத்தியோகத்துக்காக நீங்கள் வெள்ளையர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து, தெண்டனிட்டு, வணங்கி, தூபம் காட்டி, வெள்ளையரைப் போற்றுங்கள். யாரும் உங்கள் ராஜ பக்த பூஜையில் குறுக்கிட மாட்டார்கள். ஆனால், ராஜ பக்தி வேகத்தில் தேசத்துக்குத் துரோகஞ் செய்ய வேண்டாமென்றுமட்டும் கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்காரையும், சமஸ்தானங்களையும் நம்பவேண்டாமென சத்தியமூர்த்தி ஐயர் கூறியது உங்கள் மனதில் அம்புபோல் பாய்ந்தது போலும்! உடனே நீங்கள் "காங்கிரசை நம்ப வேண்டாம்; கரே ஞாபகமிருக்கட்டும்" என்றீர்கள். கரே சம்பவம் ஞாபகமிருக்கிறது. அவரும் உங்களைப்போன்ற பதவி ஆசைபிடித்தவரே! உங்கள் மண்டைக்கொழுப்பும், கர்வமும் அவருக்கும் ஏற்பட்டே, அவர் அழிவைத் தேடிக் கொண்டார். அதுபோன்ற அழிவு உங்களுக்கும் நெடுந் தூரத்திலில்லை. இந்திய சர்க்காரும், உங்கள் பதவியும் சாஸ்வதமல்ல; என்றும் சிரஞ்சீவியாக இருக்கமுடியாது. ஆகவே, நீங்கள் தின்னும் உப்பையும், பிறந்த தேசத்தையும், அதின் கௌரவத்தையும் பதவிக்காகக் காட்டிக் கொடுத்துவிட வேண்டாம். உங்களை நான் கெஞ்சிக் கேட்பது அது ஒன்றே.

டிங்—டாங்

எம். ஏ. ஜின்னா,
புது-டில்லி.

லீக் தலைவரே!

ஒரு காலத்தில் தீவிர வாதியாக இருந்த நீங்கள், இப்பொழுது வகுப்பு வாதியாக மாறியது காலத்தின் கோலமென்றுதான் நினைக்கிறேன். அது உங்கள் குற்றமல்ல; துரதிர்ஷ்டம் பிடித்த இந்தியாவின் தலைவிதி யென்றுதான் சொல்லவேண்டும். சத்தியமூர்த்திஐயர், இந்திய சட்ட சபையில் சர்க்காரையும், சமஸ்தானங்களையும் நம்பவேண்டாமென இடித்துக் கூறியது, உங்கள் தலையிலேயே பெரிய வெடி வந்து விழுந்ததுபோலாகிவிட்டதா? சர். சர்க்கார், மூர்த்தி அவ்வாறு பேசியதற்குக் காரணமென்னவென்று கேட்டார். உடனே நீங்கள் துள்ளிக் குதித்துக் "குற்றமுள்ள நெஞ்சு!" என்று பதில் சொன்னீர்கள். யாருக்குக் குற்றமுள்ள நெஞ்சு என்று உங்களையே கேட்கிறேன். உங்கள் நெஞ்சில் கை வைத்துக் கூறுங்கள். குற்றமுள்ள உங்கள் நெஞ்சு குறு குறு வென்று சொல்லுகிறதா, இல்லையாவென்பதைச் சொல்லுங்கள். உங்கள் நெஞ்சின் குறு குறுப்பை அடக்கமுடியாமல் அந்தப் பாரத்தை மூர்த்தி தலையில் போட்டீர்கள் போலும்! இனிமேல்அவ்வாறு செய்யாதீர்கள். குற்றமுள்ள உங்கள் நெஞ்சு, நீங்கள் இறக்கும் வரையில் குறு குறு வென்று குத்திக் குடையவே செய்யும். அது உங்கள் குற்றம். நீங்கள் தலையில் தூக்கிப் போட்டுக்கொண்ட வகுப்பு வாத தோஷம்! அந்த தோஷத்தை நீங்கள் கடைசி வரையில் அனுபவித்துத்தான் தீரவேண்டும். அதுவே உங்களுக்குச் சரியான தண்டனையென்று நினைக்கிறேன். சத்தியமூர்த்தி ஐயர் கூறியதுபோல் பிரிட்டிஷார் உங்களுக்குத் தஞ்சமல்ல; அவர்கள் இன்றைக்கிருக்கிறார்கள்; நாளை மூட்டை, முடிச்சுகளுடன் ஓடுவார்கள். இந்திய தேசமும், இந்திய மக்களுமே உங்களுக்குத் தஞ்சமென்பதை மறந்துவிடாதீர்கள்.

டிங்—டாங்

டாக்டர். அம்பேத்கார்,
பம்பாய்.

ஹரிஜனத் தலைவரே,

உங்களை ஒரு தீவிரவாதி, உயர்ந்த சீர்திருத்தவாதி என்று நினைத்திருந்தேன்; ஆனால், நீங்கள் ஒரு பிற்போக்கான, சுயநலவாதி என்பதை இப்பொழுதுதான் அறிந்தேன். பம்பாய் சர்க்கார் கொண்டு வந்திருக்கும் மதுவிலக்குத் திட்டம் அவசியமில்லை யென்று பம்பாய் அசெம்பிளியில் நீங்கள் கூறியது என்னைத் திடுக்கிடச் செய்தது. நீங்கள் ஹரிஜனங்களுக்கு ஒரு தலைவர் மட்டுமல்ல; தொழிலாளர்களுக்கும் ஒரு பெரிய தலைவர். மதுவைக் குடித்து அழிந்து கெடும் மக்கள் பெரும்பாலும் தொழிலாளர்களும், ஹரிஜனங்களுமே யாவர். அவர்கள் தலைவராக இருக்கும் நீங்கள் மதுவிலக்குக் கூடாதென்று சொல்லுவது ஆச்சரியமல்லவா? இந்த மனப் போக்குடைய நீங்கள்தான் தொழிலாளர்களுக்கும், ஹரிஜனங்களுக்கும் வானத்தைப் பிளந்து வைகுண்டம் காட்டப் போகிறீர்கள் போலும்!

டிங்—டாங்

சாப்மன் மார்டிமர்,
புது-டில்லி.

துரையே,

பாஞ்சால வெள்ளையர் சங்கத்தில் நீங்கள் பேசியபோது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு முடிவு காலம் வந்து விட்டதென்று பண்டித ஜவார்லால் கூறியதை எதிர்த்துக் கண்டித்தீர்கள். பண்டித ஜவார்லால் கூறியது வெறும் பகற்கனவென்றீர்கள். அது பகற்கனவா? இல்லை; முற்றிலும் சரியான பேச்சு. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருக்கிறதா, இறந்து வருகிறதா என்பதை அறிய வேண்டுமா? வேறு யாரிடமும் கேட்கவேண்டாம். உங்கள் பழம் பெருச்சாளி லாயிட் ஜியார்ஜைக் கேட்டுப் பாருங்கள்; அவர் உங்கள் ஏகாதிபத்திய பித்தம் தெளிய மருந்து கொடுப்பார். இன்றேல், ஹிட்லரையும், முஸோலினியையும் விசாரித்துப் பாருங்கள். அவர்கள் உங்களுக்குச் சரியான "டோஸ்" கொடுப்பார்கள். அத்துடன் உங்கள் வெள்ளை ஏகாதிபத்திய திமிர் ஒழியும்; இந்தியாவிலிருந்து கொண்டு கொக்கரிப்பதால் பயனில்லை. சீமைக்கு ஒரு முறை போய் வாருங்கள்; உங்கள் மயக்கம் தெளியும்; அதுவரையில் வீண் ஜம்பம் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருங்கள்.

டிங்—டாங்

ஷாபி முகமது;
சென்னை.

முஸ்லிம் தலைவரே,

வேலூரில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, அதின் பெருமையை

(அடுத்த பக்கம் பார்க்க)



லிம்டி சமஸ்தானத்தில் காயம்பட்ட பல சமஸ்தானத் தொண்டர்கள், சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

காந்திஜி அந்தக் கல்வித் திட்டத்தை புகுத்திருக்கிறாரென்றும் சுயமரியாதைக்காரர் குறைகூறி வருகிறார்கள்; அவர்களுக்குக் காந்திஜியின் கல்வித் திட்டத்தின்நுட்பத்தை கண்டுபிடிக்க மூளை இல்லையென்றேசொல்லவேண்டும். அவர்கள் மூளையில் ஒன்றில் அசடு தட்டியிருக்க வேண்டும். இன்றேல், அவர்கள் மூளை அழுகி, ஒன்றுக்கும் பயன்படாததாக இருக்க வேண்டும். இதைத் தவிர வேறு காரணம் எதுவும் இருக்கமுடியாது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

யும், மகத்துவத்தையும் பற்றி நீங்கள் குறிப்பிட்டது எந்த இந்தியரின் உள்ளத்தையும் பரவசப்படுத்து மென்பதில் சந்தேகமில்லை. தேசியக் கோடியை சு. ம. காரநம் முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்ளுகிறர்களில்லை. அதைப் பழிக்கும் சு. ம. முஸ்லிம்களும், லீக் முஸ்லிம்களுமுண்டு. ஆனல், அதே முஸ்லிம் வகுப்பைச் சார்ந்த நீங்கள் தேசியக் கோடியை இவ்வளவு அழகாகப் பாராட்டிப் பேசியது உண்மையில் போற்றத் தக்கதே. இந்திய தேசியக் கோடி, இந்தியர் எலும்புகளாலும், இரத்தந்தாலும் உற்பத்தி செய்யப்பட்டது. அந்தத் தேசியக்கோடியை இந்திய மக்கள் அனைவநும் ஏற்றுக் கொண்டு, கௌரவிக்க வேண்டியது கடமை. தேசியக் கோடியை கௌரவிக்கும் கௌரவம், தேசத்தையும், தேச மக்களையும் சாநும். தேசியக் கோடியே நமது நாட்டின் சின்னம்! அதுவே நமது கௌரவம். உங்கள் உபதேசம், தமிழநக்கு, விசேஷமாக சு. ம. தமிழநக்கும், முஸ்லிம்களுக்கும் மண்டையில் ஏறுமென்று நினைக்கிறேன்.

டிங்—டாங்

...கிறதோ அங்கு துள்ளிக் குதித்துவிடுவீர்கள். அதுதான் உங்கள் கோள்கை. அப்பேர்ப்பட்ட உங்களுக்கு டாக்டர். முதலியாரின் சேவைகளைப் பாராட்டிப் பேச என்ன யோக்யதை இநக்கிறதேன்று கேட்கிறேன். டாக்டர். முதலியாநக்கு ஜஸ்டிஸ் தலைவர்கள் செய்த துரோகம் கொஞ்சமல்ல. எனினும், அவர் கொள்கையை விட்டுக் கொடுத்ததே கிடையாது; கடைசி வரையில் ஒந ஜஸ்டிஸ் வீரராகவே மாண்டார். இனிமேலாவது உங்களுக்கு அந்த நல்ல புத்தி வநமென்று நினைக்கிறேன்.

டிங்—டாங்

சர் பன்னீர் செல்வம்,
சென்னை.

சு. ம. கிறிஸ்துவரே!

உங்களுக்கு சு. ம. பித்து தலைக்கேறியிநக்கிறது. எங்கு சென்றலும்- சு. ம. பிரசாரத்தில் இறங்கிவிடுகிறீர்கள். அசெம்பிளியில்கூட உங்களுக்கு அந்தப் பித்தம் தெளிவதாகவில்லை. எத்தனையோ முக்கியமான பிரச்னைகளிநக்கின்றன; நீங்கள் கவனிக்கக்கூடிய நன்மையான காரியங்கள் பல உண்டு. அதற்காகக் காங்கிரஸ் சர்க்காநடன் சண்டை போடுயில் இநந்த இடம் தெரியாமலிநந்த தாஸ்களும், பரவஸ்துகளும் உங்களைவிடப் பெரியாநக்கு அடுத்த படியாய் வந்து விட்டார்கள். அவர்கள் படங்களைத் திறந்து வைக்கவும், பூஜை செய்யவும் அவர்களே மறைமுகமாகத் தூண்டிவிட்டு, வேலை செய்கிறர்கள். பெரியாரையும் தோற்கடித்து பெரியாராக வர நினைக்கிறர் ஒந சில்லரை தேவ்வதை! உங்களுக்கோ அதிர்ஷ்டமில்லை. யாரென்ன செய்வது? நீங்கள் கோபப்பட்டுத்தான் என்ன பயன்? உங்கள் தலைவிதி அவ்வளவுதானென்று எண்ணி, ராமா, கோவிந்தா வென்று சும்மா இநங்கள். அதுதான் புத்தி!

டிங்—டாங்



லிம்டி சமஸ்தானத்தில் பொதுக் கூட்டங்கள் நடத்தக்கூடாதென சமஸ்தானமன்னர்கள் தடுத்து வநகின்றனர். தடை செய்யப்பட்ட ஒந கூட்டத்துக்கு ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி தலைமைவகித்துப் பேசுகிறர்.

அப்துல் ஹமீத்கான்,
சென்னை.

சு. ம. முஸ்லிம் சூரரே!

காலஞ் சென்ற டாக்டர் நடேச முதலியாரின் இரண்டாவது ஆண்டுக் கூட்டத்துக்கு நீங்கள் தலைமை வகித்தது எனக்கு வேடிக்கையாக இநந்தது. ஆலையில்லாத ஊரில் இலுப்பை பூ சர்க்கரையாம்! தலைவரில்லாத ஜஸ்டிஸ், சு. ம. கூட்டங்களுக்கு நீங்கள் பெரிய தலைவராகிவிடுகிறீர்கள். அது ஒந புறமிநக்கட்டும்; அக் கூட்டத்துக்கு நீங்கள் தலைமை வகித்து, டாக்டர். நடேச முதலியாரின் சேவைகளைப் பாராட்டிப் பேசினீர்கள். முதலியார் உண்மை உழைப்பாளி யென்றும் கைமாறு கநதாதவரென்றும், அவநக்கு ஜாதி பேதம் கிடையாதென்றும் கூறினீர்கள். ரொம்ப சரி; டாக்டர். நடேச முதலியார் ஒந அரிய சேவகர். அவர் கொள்கை எவ்வாறிநந்தபோதிலும், அவர் கொள்கையிலிநந்து கடைசிவரையில் நழுவியதே கிடையாது. ஆனல், நீங்கள் அவ்வாறு நடந்து கொள்ளுகிறீர்களா? சந்தர்ப்பத்தைக் கண்டு, ஒந கட்சியிலிநந்து மற்றெந கட்சிக்கு பல்டி அடிப்பதே உங்கள் சுபாவமாக இநந்து வநகிறது. சுயநலம் உங்கள் நோக்கம்; எங்கு பதவி கிடைக்கவதை விட்டு, தரித்திரம் பிடித்த சு. ம. இயக்கத்தைக் கட்டி மாரடிக்கிறீர்களே, அது எதற்கு? சு. ம. தலைவர் நாயக்கர் சிறை மாற்றத்தைப்பற்றி சரமாரி கேள்வி கேட்கிறீர்கள். ஏன்? அதனல், அதி சீக்கிரத்தில் பெரியாராகிவிடலா மென்ற எண்ணமா? அவ்வித பெரியார் பட்டம் நீடித்திநக்காது. நீங்கள் பெரியாராக மதிக்கப்படுவதை மறந்து உங்களைச் சிறியாராகவே பொதுஜனங்கள் மதிப்பார்கள். ஆகவே, அந்தச் சனியனை-சு. ம. பீடையை இன்றெடு விட்டொழித்துத் தலைமுழுகிவிடுங்கள். அதுதான் சமர்த்து!

டிங்—டாங்

எஸ். சோமசுந்தர பாரதி,
பசுமலை.

சுத்த தமிழரே!

நிலக்கோட்டையில் நடைபெறப் போகும் பெரிய தமிழர் மகா நாட்டுக்கு உங்களை உப தலைவராகத் தேர்ந்தெடுத்திநப்பதாக ஒந செய்தி வந்தது. அந்தச் செய்தி தவறு என்றும், உங்களைக் கேட்காமலேயே உங்களை அப்பதவிக்கு நியமித்திநப்பதாகவும் நீங்கள் கூறி, அப்பதவியேற்க மறுத்துவிட்டீர்கள். என் உங்களுக்கு அவ்வளவு கோபம்? தலைவர் பதவி கொடுக்கவில்லை என்ற வநத்தமா? நேற்றுவரை

ஆனந்தம் மனே உற்சாகம்

உடையவர்களாயிருக்கவேண்டுமாகில் நீங்கள் எல். ஜி. பெருங்காயத்தையே வாங்கி உபயோகியுங்கள். லட்சக்கணக்கான மக்கள் அதன் அருமையை அறிந்து அதையே வாங்கி உபயோகிக்கிருர்கள்.

எல். ஜி.

பெருங்காயமானது

எல்லா பெருங்காயங்களிலும் தலை சிறந்தது
நீங்கள் பெருங்காயம் வாங்கும்போது
எல். ஜி. மார்க் போட்டிருக்கிறதாவென்பதைக் கவனித்து வாங்குங்கள்
போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்

லால்ஜி கோது அன் கோ,
சௌகார்பேட்டை, மதராஸ்.

முன்னேற்றம்

நீபா சோப் இரஸாயன முறையால் அபிவிருத்தி செய்யப்பட்ட நூதன வகையில் தயார் செய்யப்பட்டுள்ளது.

●

நீபா சோப் வேப்பெண்ணையுடன் சர்வ சரும வியாதியை தடுத்து குணப்படுத்தக்கூடிய மரவெட்டி எண்ணெயுடன் செய்யப்பட்டுள்ளது.

●

நீபா சோப் வைடமின் F என்ற சத்தையும் சேர்த்து செய்யப்பட்டுள்ளது. வைடமின் F சருமத்திற்கு ஒருவிதமான டானிக். சருமத்தை மிருதுவாக்கி பிரியப்படத்தக்க வனப்பை அளித்து அழகை அதிகப்படுத்தும்.

●

நீபா வாசனையோ அபாரம். உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஸ்நானத்தில் மகிழ்ச்சியை அளிக்கும்.

நிச்சயமாக நீபாவே சிறந்த சோப்

என்பதைத் தாங்கள் இலகுவில் அறிவீர்கள்

Ganga Works, Adyar.
(S. India)

கிளிப்பேச்சு

ஐயோ இந்தப் புத்தி!

பாதி நிர்வாண பக்கீர் சந்தேகம்

யானை வருகுது பின்னே!

பழம் நழுவிப் பாலில் விழுமா?

தாய் மாரே புறப்படுங்கள்!

வாய் வீரம் வேண்டாம்

கிளியே, இவ்வாரம் விசேஷமென்ன? காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியதா? தலைவர்கள் என்ன முடிவுக்கு வந்தார்கள்?

அதுதான் வருத்தத்துக்குரிய விசேஷம். காங்கிரஸ் காரியக் கமிட்டியை இம்மாதம் 22ந்தேதி நடத்தத் தீர்மானித்திருந்தார்கள். காரியக் கமிட்டி அங்கத்தினர் 10 பேர் வார்தாவுக்குக் குறிப்பிட்ட நாளில் வந்திருந்தனர். மௌலானா அபுல்கலாம் அஸாத் எல்லைப்புறத்துக்குச் சென்றிருந்தாரல்லவா? அவர் வார்தாவுக்குத் திரும்பி வருகிற வழியில் அவருக்குப் பல்நோய் ஏற்பட்டு டில்லியிலேயே தங்கிவிட்டார். எல்லைக் காந்தி அப்துல் கபூர்கான் எல்லைப்புற விஷயத்தில் தற்போது விசேஷ சிரத்தை எடுத்து வருகிறார். ஆகவே, அவரால் வார்தா கூட்டத்துக்கு வரமுடியாதுபோயிற்று. ஜம்னலால் பாஜாஜ் ஜெய்ப்பூர் பொறுப்பாட்சிப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தற்போது சிறையிலிருக்கிறார். இந்த மூவரும் சரத் சந்திரபோஸையும் தவிர இதர காரியக் கமிட்டி மெம்பர்கள் வார்தாவுக்கு வந்திருந்தனர். தலைவர் சுபாஷ் பாபுவுக்குத் திடீரென கபவாத ஜுரம் வந்தது. வார்தாவுக்கு வர அவர் எவ்வளவோ முயன்றும் முடியாது போயிற்று. ஜுரம் 103டிகிரிக்கு ஏறிவிட்டது. ராஷ்ட்ரபதிக்குமயக்கமும் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருந்ததால், அவரால் வார்தாவுக்கு வர முடியாது போயிற்று. டாக்டர்களும் அவரை அனுமதிக்கவில்லை. காரியக் கமிட்டிக் கூட்டத்தை ஒத்தி போடும்படியும், மகாத்மா ஆலோசனையைக் கேட்டும் சுபாஷ்பாபு காந்திஜிக்குத் தந்தியடித்திருந்தார். சுபாஷ் பாபுவின் நிலைமையை உத்தேசித்து, அவரை வார்தாவுக்கு இந்த நிலைமையில் வரவேண்டாமெனக் காந்திஜீ பதில் தந்தி கொடுத்தார். தந்தி கொடுக்குமுன், ஜவார்லாலையும், இதர காரியக் கமிட்டி அங்கத்தினர்களையும் காந்திஜி கலந்து ஆலோசித்தே தந்தி கொடுத்தார். காரியக் கமிட்டி கூடாது போயினும், வார்தாவுக்கு வந்திருந்த 10 காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் கலந்து ஆலோசித்தார்கள். அவர்கள் ராஜினாமாச் செய்வதைப்பற்றியே காந்திஜியுடனும், ஜவார்லாலுடனும் இருதினங்களாக விவாதித்தனர். பண்டித ஜவார்லாலைத் தவிர, இதர அங்கத்தினர்களான, சர்தார் பட்டேல் ஆச்சாரியா கிரிபாலினி, புலாபாய் தேசாய், சரோஜினி தேவி, சங்கரராவ் தேவ், டாக்டர் பட்டாபி சீதாராமய்யா, ஜெயராம் தாஸ் தௌலத்ராம், பாபு ராஜேந்திரர், ஹரி கிருஷ்ண மெஹதாப் முதலியோர் ஒன்று சேர்ந்து அவர்கள் ராஜிநாமா கடிதத்தை ராஷ்ட்ரபதி சுபாஷ்பாபுவுக்கு அனுப்பிவிட்டார்கள். அவர்கள் ராஜிநாமாவுடன், எல்லைக் காந்தி, ஜமுனலால் பஜாஜ், மௌலானா அபுல் கலாம் அஸாத் முதலிய மூவருடைய ராஜிநாமாவையும் சேர்த்துக்கொள்ளும்படி அவர்கள் தெரிவித்திருந்ததால் அவர்கள் மூவர் பெயரையும் சேர்த்துக்கொண்டார்கள். அவர்கள் ராஜிநாமா கடிதத்தை அனுப்பிவிட்டதாகவும், அவர்கள் ராஜிநாமாவை ஒப்புக்கொள்ளும்படி கேட்டும் சுபாஷ்பாபுவுக்கு ஒரு தந்தியும் கொடுத்துவிட்டார்கள். பண்டித ஜவார்லால் நேருவும் காரியக் கமிட்டி அங்கத்தினர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். அவர் தனிமையாக ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையை காணும் எந்த இந்தியன் மனமும் வருந்தாமலிருக்க முடியாது.

காரியக் கமிட்டி அங்கத்தினர் எல்லோரும் ராஜிநாமா செய்துவிட்டதால், காங்கிரசில் பிளவு ஏற்படுமோ?

ராஷ்ட்ரபதி சுபாஷ்பாபுவும், அவருடைய சகோதரரான சரத் சந்திரபோஸுந்தான் ராஜிநாமா செய்யவில்லை. மற்ற அங்கத்தினர் எல்லோரும் ராஜிநாமாச்செய்துவிட்டார்கள். இச்சந்தாப்பத்தில் சுபாஷ் பாபுவுக்கு ஜுரம் வந்தது கஷ்டகாலமென்றே சொல்லவேண்டும். வார்தாவில் நடைபெறவிருந்த காரியக் கமிட்டிக் கூட்டத்திலாவது தலைவர்களுக்குள் ஒருவித சமரசம் ஏற்பட்டு, ஒற்றுமை நிலவக்கூடுமென எதிர்பார்த்தேன். அந்த ஒற்றுமை ஏற்படவில்லை. காங்கிரசில் பிளவு ஏற்படாதென்பது நிச்சயம். ஆனால், காரியக் கமிட்டியில், சிறந்த தலைவர்கள் இருக்கமாட்டார்கள். காந்திஜியுடன் 20 வருடங்களாகத் தீவிரமாகப் பாடுபட்டுத் தேசத்துக்கு அரிய பெரிய தியாகஞ்செய்த தலைவர்கள் இனிமேல் காரியக் கமிட்டியில் அங்கத்தினர்களாக இருக்கமாட்டார்கள். இது நமது தாய்நாட்டின் துரதிஷ்டமென்றே சொல்லவேண்டும். நெருக்கடியான இச்சந்தர்ப்பத்தில் இத்தனை அரிய தலைவர்களின் ஆலோசனைகளையும், சேவையையும் இழப்பதென்றால், அது சகிக்கக்கூடியதல்ல. அவர்கள் காரியக் கமிட்டியில் இல்லாதுபோயினும், காங்கிரசுக்கும், தேசத்துக்கும் அவர்கள் சேவை கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. ராஷ்ட்ரபதி தேர்தலின் போது, சுபாஷ் பாபு, காரியக் கமிட்டி மெம்பர்கள்மீது சுமத்திய அபாண்டப் பழியே அவர்கள் ராஜிநாமாவுக்கு முக்கிய காரணம். காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் ரகசிய ஒப்பந்தஞ் செய்து, பெடரேஷனை ஏற்றுக்கொள்ள எண்ணியிருப்பதாகவும், பெடரேஷன் மந்திரி சபையில் யார் யார் இருக்கவேண்டுமென ஒரு நகல் கூட தயாராகிவிட்டதாகவும் சுபாஷ் பாபு பகிரங்கமாக ஒரு அறிக்கையில் குறிப்பிட்டார். அவருடைய காரியக் கமிட்டி மெம்பர்களிடம் அவருக்கு விசுவாசமில்லை. இவ்வித அபாண்டப் பழி சுமத்திய ஒரு தலைவருடன், இதர தலைவர்கள் எப்படி ஒத்துழைக்க முடியும்? மேலும், காந்தியர்களை சுபாஷ் பாபு மிதவாதிகளாகக் கருதுகிறார். அவரோ தீவிரவாதி. மிதவாதிகளுடன் அவரால் ஒத்துழைக்க முடியாது. அவருடன் சேர்ந்த தீவிரவாதிகளுடன் அவர் காங்கிரஸ் திட்டத்தை நடத்திச் செல்லுவதே நல்லதென்று எண்ணி தலைவர்கள் ராஜிநாமாச் செய்துவிட்டார்கள். தலைவருக்குப் பூர்ண சுதந்திரம் கொடுத்துவிட்டார்கள். அவருடைய அதி தீவிர வேலைத்திட்டத்துக்கு அவர்கள்குறுக்கே நிற்கமாட்டார்கள் இதுதான்; தலைவர்கள் கருத்து. பண்டித ஜவார்லால் சமரசத்துக்குப் பெரிதும் முயன்று பார்த்தார். தலைவர்களுடன் நெடுநேரம் வாதாடினார். ஆனால், சமரசத்துக்கு இடமே இல்லை. தலைவர்கள் மீது சுபாஷ் பாபு சுமத்திய வீண் பழியை, பகிரங்கமாக வாபஸ் வாங்கி, மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி பண்டித ஜவார்லால் சுபாஷ் பாபுவுக்கு யோசனை கூறி வற்புறுத்தினரெனத் தெரிகிறது. சுபாஷ் பாபு அவ்வாறு மன்னிப்புக் கேட்டிருந்தால், இன்று நிலைமை வேறு விதமாகஇருந்திருக்கும். சுபாஷ்பாபு இன்று ஒரு அரசியல் அநாதைக் குழந்தையாக இருந்திருக்கமாட்டார்.

சுபாஷ்பாபு கூறிய வீண் பழியை அவர் வாபஸ் வாங்கலாம்; அதற்கு இன்னம் காலமிருக்கிறது. காலம் மிஞ்சி விடவில்லை. அதற்குள் தலைவர்கள் ஏன் ராஜிநாமாச் செய்யவேண்டும்?

மெய்தான்; காலம் இன்னமும் மிஞ்சி விடவில்லை. ஆனால், ஜவார்லால், சுபாஷ்பாபுவிடம் இதை வற்புறுத்திப் பல தினங்களாகின்றன. இதுவரையில் வாபஸ் பெற்றுக் கொள்ளாதவரா இனிமேல் வாபஸ் வாங்கப் போகிறார்? அவ்விஷயத்தில் ஜவார்லாலுக்குக் கூட நம்பிக்கை இல்லை. ஆகவே, அவரும் ராஜிநாமாச் செய்து விட்டார். திரிபுரா காங்கிரஸ் நடை பெறுவதற்குமுன் காரியக் கமிட்டிக் கூட்டம் நடைபெறுமோ, என்னமோ சொல்லமுடியாது. அப்படி நடந்தாலும் ஒரு கூட்டம் நடை பெறலாம். அந்தக் கூட்டமும் எப்பொழுது நடக்குமென்று நிச்சயமாகக் கூறமுடியாது. காரியக் கமிட்டி மெம்பர்கள் ராஜிநாமா செய்து விட்டதால், சுபாஷ் பாபு அவருடைய அதிதீவிர நண்பர்களிடமிருந்து அங்கத்தினர்களைப் பொறுக்கி எடுத்துக் கொள்வாரென்றே நினைக்கிறேன். நிலைமை இவ்வளவு தூரத்துக்கு முற்றிவிடுமென்று யாரும் நினைக்கவில்லை. விசேஷமாக அதி தீவிர வாதிகள் இதைக் கனவில்கூட நினைத்திருக்கமாட்டார்கள். இப்பொழுதுதான் அவர்கள் உண்மையை உணர்ந்தார்கள். அவர்கள் பொறுப்பையும் அறிந்தார்கள். கஷ்ட காலத்தையும் தெரிந்து கொண்டார்கள். அதிதீவிர வாதிகள் பலர் இப்பொழுது காந்திஜியை ஆதரிக்கிறார்கள். காந்திஜியே காங்கிரசுக்குத் தலைமை வகித்து நடத்தவேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள். ஆனால், இந்தப் புத்தி ஏற்கனவே இருந்திருக்கவேண்டும்.

சுபாஷ் பாபு உணர்ந்தாரா? காந்திஜியைக் கண்டு பேசியதால் ஏதேனும் பலன் கிடைத்ததா?

சுபாஷ்பாபு உணர்ந்திருக்கிறாரென்றே நினைக்கிறேன். அவரும் புத்தியை ஆதியில் கடன் கொடுத்துவிட்டார். காந்திஜிமட்டில் அவருக்கு அவ்வளவு உயர்ந்த எண்ணம் கிடையாது. இது சுபாஷ்பாபு எழுதியிருக்கும் "சுதந்திர இந்தியா" என்னும் புஸ்தகத்திலிருந்தே தெரிந்துகொள்ளலாம். காந்திஜி ஒரு சந்நியாசி; அவருக்குக் காங்கிரசில் வேலையில்லையென்று சுபாஷ்பாபு நினைக்கிறார். காந்திஜி காங்கிரஸிலிருந்து ஒதுங்கிவிடவேண்டுமென்பது அவருடைய அந்தரங்க நோக்கமாக இருக்கலாம். ஆனால், இப்பொழுது அவர் காந்திஜியின் அசைக்கமுடியாத உறுதியையும், சக்தியையும் நன்கு அறிந்திருப்பாரென்று நினைக்கிறேன் சுபாஷ் பாபு, காந்திஜியைக் கண்டு பேசியபோது, காந்திஜி அவரிடம் அவருடைய கருத்து என்னவென்

(அடுத்த பக்கம் பார்க்க)

பதைப் பச்சையாகக் கூறிவிட்ட தாகத் தெரிகிறது. காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் மீண்டும் சுபாஷ் பாபுவுடன் ஒத்துழைப்பதென்பது முடியாத காரியம். சுபாஷபாபு சுதந்திரமாகவே ஒரு காரியக் கமிட் டியை அமைத்து, அவருடைய வேலைத்திட்டத்தை நடத்திக் கொண்டுபோவதுதான்உசிதமென்று கூறிவிட்டார். சுபாஷ் பாபு, காந்தி ஜியை வற்புறுத்தி, திரிபுரா காங்கி ரஸுக்கு வரும்படி கேட்டுக்கொண் டார். அதின்பேரில் காந்திஜியும் திரி புரா காங்கிரசுக்கு வரஒப்புக்கொண் டிருக்கிறார். காந்திஜிக்கு என்ன ஆசை இருக்கிறது? அவர் சந்நியாசி; சர்ச்சில் கூறியதுபோல், "பாதி நிர் வாண பக்கீர்!" கோவணாண்டி!! அவர் காங்கிரசிலிருந்தாலும் ஒன்று தான், வெளியிலிருந்தாலும் ஒன்று தான். அவருக்குக் கிரீடம் சூட்டப் போவதுயாருமில்லை. அவ்விதகிரீடத் தைக் காந்திஜி எதிர்பார்க்கவுமில்லை. அவருக்கு இந்த உலகமே ஒரு தூசி. அப்பேர்ப்பட்டஒருபுண்யாத்மாவை சுபாஷ் பாபுவோ, மற்றவர்களோ சந் தேகிக்கவேண்டிய காரணமென்ன? காந்திஜி அவருடைய உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் தேசத்திற்கே அர்ப்பணஞ் செய்து விட்டார். தேச விடுதலையே அவர் கொள்கை; தேச சுதந்திரமே அவ ரது உயிர். இந்தநிலைமையில் அவர் தேசத்தைக் காட்டிக் கொடுத்துவிடு வார்; தேசத்துக்கு துரோகஞ் செய்துவிடுவாரென்று நினைப்பது முதல்தரமான அறிவீனமென்றே சொல்லவேண்டும். தன்னம்பிக்கை இல்லாதவர்களும், சுய நலமிகளும், பதவி மோகம் பிடித்தவர்களுமே அவ் விதம் சந்தேகிப்பார்கள். உண்மை தேச பக்தர் எவரும் காந்திஜியைச் சந்தேகிக்க வேறு காரணமே கிடை யாது.

காந்திஜியை சந்தேகிப்பதா யிருந்தால், உலகில் யாரை யுமே நம்பமுடியாது. எல்லோ ரையும் சந்தேகிக்கவேண்டியது தான். இந்திய சுதந்திரங்கூடச் சந்தேகந்தான்.

ஆமாம், அவ்வித சந்தேகப் பேர் வழிகளும், தேசத் துரோகிகளும், அற்பர்களும் இந்தியாவில் இல்லாம லில்லை. தென்னாட்டில் எங்கோ ஒரு மூலையில் கிடக்கும் சுயமரியாதைச் சூரர்கள் என்ன சப்பட்டையா? அவர்கள் "மகாத்மா" நாயக்கர்என்ன வீராதிவீரரல்லவா? சுபாஷ்பாபுவே காந்தியைச் சந்தேகித்தபோது, இந்த ராமசாமிகளும், குமாரசாமிகளும், தாஸ்களும், பூஸ்களும், வாஸ்களும் எம்மாத்திரம்! கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே; யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்று சொல்லுவார்கள். இந்தச் சந்தேகவாதிகளுக்குக் கேடு காலம் நெருங்கிவிட்டது. அதனால் தான் அவர்கள் சந்தேக மணி யோசையும், வசைபுராண ஓசைகளை யும் கொட்ட ஆரம்பித்திருக்கிறார் கள். அவர்கள் சந்தேகப் பயனை அவர்களே அனுபவிக்கட்டும்.

ஆமாம்; இது பெரிய சோதனை காலம். காங்கிரசுக் குச் சோதனை காலம்; காங்கி ரஸ் குள்ளிருந்தே காங்கிரஸ்மீது

கிளிப்பேச்சு

(முன் பக்கத் தொடர்ச்சி)

சதா வசை பாடிக்கொண்டி ருந்த அதிதீவிரவாதிகளுக்குப் பெரிய சோதனை காலம்.

அதி தீவிரவாதிகள் ஒவ்வொருவ ராகப் போஸை கை கழுவ ஆரம் பித்துவிட்டார்கள். சிலர் மெதுவாக நழுவிப் போய்க்கொண்டிருக்கிறார் கள். 'ஒரு இழவு கொள்கையும், உறுதியுமில்லாத எம். என். ராய் போன்ற சில தீவிரவாதிகளே பத விக்கு ஆசைப்பட்டுப் போஸைத் தட்டிக்கொடுத்து ஆதரிக்கிறார்கள். இந்த அதி தீவிரவாதிகளின் முடிவு என்னவாகுமோ இப்பொழுது ஒன்றும் சொல்ல முடியாது. திரி புரா காங்கிரசில்தான் முடிவு தெரியவேண்டும். அந்த முடிவும் திரிபுரா காங்கிரசுக்குச் செல்லும் டெலிகேட்டுகள் கையிலிருக்கிறது. அவர்கள் ஒன்று செய்யவேண்டும். காந்திஜி யிடத்தில் எல்லோருக்கும் நம்பிக்கை இருப்பதாகவும், அவரே எப்பொழுதும் போல் காங்கிரசை நடத்திச் செல்லவேண்டு மென்றும் தீர்மானிக்க வேண்டும். இந்தத் தீர் மானத்தைச் சுபாஷ் பாபுவே கொண்டுவந்து நிறைவேற்றினால் இன்னமும் நல்லது. அது பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோலிருக் கும். சுபாஷ் பாபுவுக்குக் காந்திஜி மீது இன்னமும் நம்பிக்கை இல்லா திருந்தால், அதை அவர் பகிரங்க மாக கூறிக், காந்திஜியைக் காங்கிரசி லிருந்து விலகிக்கொள்ளும்படி கேட் கலாம். இன்றேல், அவரே விலகிக் கொள்ளுவது நல்லது. காங்கிரஸில் பெரும்பான்மையாக இருக்கும் காந்தியர்களுக்கு அவர் முட்டுக்கட் டையாக இருக்கக்கூடா தென்பதே எனது அபிப்ராயம். இதனால் சுபாஷ் பாபுமீது எனக்கு நம்பிக்கை இல்லையென்று அர்த்தமல்ல; அல் லது அவர் தியாகத்தையோ, சேவை யையோ, அல்லது, தேசபக்தி யையோ நான் குறைகூறுவதாக நினைத்துவிடக்கூடாது. காந்திஜிக் குள்ள சக்தியும், ஆற்றலும், பெரும் போராட்டத்தை நடத்தும் திறமை யும், இந்தியா போன்ற ஒரு பெரிய தேசத்தை முன்னின்று நடத்திச் செல்லும் வன்மையும் சுபாஷ் பாபு வுக்குக் கிடையாது. அதற்குக் காந்திஜி ஒருவரே தகுதியுடையவர். ஆகவே, தேச நலனை உத்தேசித்தே சுபாஷ் பாபுவை விலகும்படி கூறு கிறேன். அவர் விலக இஷ்டப்படா விடில் காந்திஜியிடம் நம்பிக்கை வைத்து, அவருடன் ஒத்துழைக்க லாம். சுபாஷ்பாபு தேக அசௌகரியம் காரணமாக அவர் ராஷ்ட்ரபதி பதவியை ராஜிநாமாச் செய்யலா மென்று சிலர் ஜோசியம் கூறுகிறார் கள். எனக்கு என்னமோ சந்தேகந் தான். அவர் ராஜிநாமாச்செய்தாலும் நெருக்கடி இலகுவில் தீர்ந்து விடாது.

அப்படியானால், இந்த நெருக் கடிக்கு முடிவுதான் என்ன?

முடிவு என்னவென்று இப் பொழுது ஜோசியங் கூறமுடியாது. திரிபுரா காங்கிரஸ் வரையில் பொறுத்திருக்க வேண்டியதுதான். சுபாஷ் பாபுவைவிட ஜவார்லால் பெரிய தீவிர வாதி; ஆற்றல் மிகுந்த வர். காந்திஜிக்கு அடுத்தபடியாக அவரைச் சொல்லலாம். அப்பேர்ப் பட்ட ஜவார்லால்கூட காந்திஜியின் அஹிம்சா திட்டத்தில் நம்பிக்கை கொண்டு, காந்திஜியின் உத்தம சிஷ்யராக இருக்கிறார். காந்திஜியே இந்தியாவில் அசைக்கமுடியாத தலை வர்; ஏகபிரதிநிதியென்று கூறுகிறார். அவருடைய இரும்புக் குரலே இந்தியாவின் குரலென்று சொல்லு கிறார். ஆனே போன்ற பெரிய தலைவர்கள்கூட சுபாஷ்பாபுவுக்குப் புத்தி சொல்லியிருக்கிறார்களெனத் தெரிகிறது. சுபாஷ்பாபு என்ன முடிவு செய்திருக்கிறாரோ தெரிய வில்லை. அவர் குணமடைந்ததும் ஒருவேளை அவர் முடிவு தெரியலாம். இன்றேல், திரிபுராவில் அந்த முடிவு என்னவென்பது தெரிந்துவிடும். யார் என்ன முடிவுக்கு வந்தாலுஞ் சரி, காங்கிரசில் பிளவு ஏற்படக் கூடாதென்பதே எனது பிரார்த் தனை.

உண்மைதான்; நெருக்கடி யான இச்சந்தர்ப்பத்தில் பிளவு ஏற்பட்டால், காங்கிரஸ் விரோ திகளுக்குக் கொண்டாட்ட மாக இருக்கும். இந்தியாவின் சுதந்திரப் போரும் சீரழிந்து போகும்.

அவ்வித நிலைமை ஒரு போதும் ஏற்படாதென்பது நிச்சயம். காந்தி ஜியும், இதர தலைவர்களும் அதற்கு ஒரு போதும் இடங்கொடுக்க மாட் டார்களென்று உறுதியாக நம்ப லாம். காங்கிரஸ் நிலைமை இவ்வாறி ருக்கிறது. சமஸ்தான பொறுப்பாட் சிப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போகும் சமஸ்தானங்கள் எந்த நிலை மையிலிருக்கிறதென்று பார்ப்போம். ராஜ்கோட்டிலும், ஜெயப்பூரிலும் போராட்டம் மும்முரமாகவே இருக் கிறது. பல தலைவர்கள் கைதியாகி வருகிறாகள். 16 வயது சிறுவர் கூட சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றிருக்கிறார்கள். சிறை யில் சத்தியாக்கிரகிகளுக்கு நல்ல வசதி இல்லை. சரியான சாப் பாடு, குடிதண்ணீர் கிடையாது. பெண்களை இம்சிப்பதாகவும் செய்திகள் கிடைத்திருக்கின்றன. ஆதலால் சிறையில் பலர் உண்ணு விரதமிருந்து வருகிறார்கள். காந் திஜி சமஸ்தான அதிகாரிகளுக்கு அடிக்கடி தந்தி அடித்து நிலை மையை அறிந்துவருகிறார். தால் சார் சமஸ்தானத்திலிருந்து சுமார் 30,000 மக்கள் வெளியேறி விட்டனர். தால்சாரில் நடக்கும் கொடுமைகளே இதற்குக் காரணம். இந்தச் சமஸ்தான மக்களுக்கு இட வசதி செய்து கொடுக்கக் காங்கிரஸ் தலைவர்கள் பெரும் முயற்சியெடுத்து வருகிறார்கள். ராஜகோட் போராட் தில் சேர்ந்துகொள்ள ஐக்ய மாகாண ஸ்தல ஸ்தாபன மந்திரியும், ஜவார் லால் சகோதரியுமான ஸ்ரீமதி விஜய லட்சுமி பண்டிட் மகாத்மாவின் அனுமதி கேட்டார். அவருடைய கணவர் பண்டிட் ராஜகோட் வாசி. ஆகவே, இருவரும் அதி சீக்கிரத்தில் ராஜகோட் போராட்டத்தில் ஈடுபட் டுச் சிறைசெல்லலாம். இதுபோன்று இன்னம் பல தலைவர்கள் சமஸ்தா னப் போராட்டத்தில் சேரத் தயா ராக இருக்கிறார்கள். ஆனால், ஜென ரல் காந்திஜியின் உத்திரவையே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார் கள். லிம்டி சமஸ்தான அதி காரிகள் மிகக் கேவலமாக நடந்து வருகிறார்கள். அங்கு கொள்ளை கொடுந்துன்பங்கள் சர்வ சாதாரண மாகிவிட்டது. சமஸ்தான மன்ன ரும் அதை நிறுத்தவில்லை. நிறுத்து வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத் துக்கொள்ளவுமில்லை. லிம்டியிலி ருந்தும் ஏராளமான மக்கள் வெளி யேறிவருகிறார்கள். லிம்டி கொடுமை களைச் சகிக்க முடியாததே இதற்குக் காரணம். வைசிராய் பிரபு சீக்கிரத் தில் ராஜபுதனம் சமஸ்தானங் களுக்கு விஜயஞ்செய்கிறார். அவர் அங்கு என்ன கொள்கையைப் பின் பற்றிப் பேசப்போகிறாரென்பதை எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டி ருக்கிறார்கள். ஆனால், காந்திஜியோ சமஸ்தானங்கள் சம்பந்தப்பட்ட வரையில், ஒருபோராட்டத் திட்டத் தைத் தயாராக வைத்துக்கொண்டி ருக்கிறார். அந்தப் போராட்டம் நாம் எதிர் பார்ப்பதைவிட அதிசீக் கிரத்தில் ஆரம்பித்தாலும் ஆரம்பிக் கலாம். இந்திய மக்கள் அனைவருமே அதற்குத் தயாராக இருக்கவேண்டி யதுதான்.

எனக்கு ஒரு சந்தேகம்; தென்னாட்டு சு. ம. காரர்கூட சமஸ்தான விஷயங்களில் ரொம்ப அனுதாபம் காட்டு கிறார்கள்; அவர்களும் போராட் டத்தில் சேர்ந்து கொள்ளுவார் களா?

அப்படிச் சேர்ந்தால் எவ்வளவோ நலமாயிருக்கும். திருவாங்கூர் சமஸ் தானம் சமீபத்திலிருக்கிறது. சர். சி. பி. யைக் கண்டிக்கும் சு. ம. காரர் உடனே என் போராட்டத்தை ஆரம்பிக்கக்கூடாது? ஹிந்தியைக் கட்டி அழுவதைவிட திருவாங் கூர் சமஸ்தானப் போராட் டத்தை ஆரம்பித்தால் அவர்களுக்கு தமிழர் ஆதரவு கண்டிப்பாகக் கிடைக்கும். சு. ம. தோழர்களும், தாய்மாரும் சந்து பொந்துகளில் கூடித் தீர்மானஞ் செய்வதையும், படங்களைத் திறந்து வைப்ப தையும் விட்டு, ஒரு போராட் டததில் ஈடுபடுவது நல்லது. பார்ப் பனரையும், காங்கிரசையும் திட்டி, தமிழ்நாட்டைப் பாழ்படுத்தாமல், ஒரு சத்தியமான, நன்மையான போராட்டத்தில் இறங்கினால், சு. ம. காரர் சூரத்தனத்தைப் போற்றவும், ஆதரிக்கவும் யாரும் தயங்கமாட்டார்கள். வார்த்தை அள வில் வீரம் பேசும் தோழர்களும், தாய்மாரும் என் யோசனையைச் சற்றுக் காதில் போட்டுக்கொள்ளு வார்களென்று நினைக்கிறேன். சு. ம. வீரர்கள் என்ன முடிவுக்கு வரு கிறார்களென்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

- யுத்தகோலம்! -

டுனிஸ் பிரதேசத்தைக் கைப்பற்ற லிபியாவில் படைதிரட்டும் முஸோலினி.

ஹிட்லர் திடீரென ஐரோப்பாவில் பல சம்பவங்கள் நடந்தது அனைவருக்கும் தெரியும். இதேபோன்ற சம்பவங்கள் அதி சீக்கிரத்தில் மீண்டும் ஐரோப்பாவில் ஏற்பட்டால், அதில் ஆச்சரியப்படத் தக்கது ஒன்றுமில்லை. ரைன்லந்து மீது ஹிட்லர் திடீரெனப் படையெடுத்துச் சென்றார். பிரான்சும், பிரிட்டனும் ஓலமிட்டன. ஹிட்லர் பொருட்படுத்தினரா? இல்லை. அதன்பின் ஹிட்லர் ஆஸ்திரியாவை கண் மூடி விழிப்பதற்குள் கைப்பற்றினர். என்ன நடந்தது? ஐரோப்பிய வல்லரசுகள் தட்டிக் கேட்டனவா? இல்லை. அப்புறம் ஹிட்லர் ஜெக்கோவை நசுக்கத் திட்டம்போட்டார்; ஸுடேடன் பிரதேசங்களைக் கேட்டார். யுத்தம் வரும்போலிருந்தது. ஜெர்மன், ஜெக்கோ ராணுவங்கள் திரண்டுவிட்டன. ஸுடேட்டனுக்காக ஐரோப்பிய யுத்தத்தை ஆரம்பிப்பதாவென்று எண்ணி, பிரிட்டனும், பிரான்சும், ஸுடேடனை ஜெர்மனிக்குத் தத்தஞ் செய்தன. பிரிட்டனையும், பிரான்சையும் நம்பியிருந்த ஜெக்கோவை நடுத்தெருவில் விட்டன. ஜெர்மனியை எதிர்த்து நிற்க அந்த வல்லரசுகளுக்கு ஆண்மை இல்லை. ஸுடேடனைக் கைப்பற்றிய ஹிட்லர் ஜெக்கோ தலையிலும் கைவைக்க ஆரம்பித்து விட்டார். அது மட்டுமா? ருமேனியாவையும், லிதுவேனியாவையும் ஜெயித்து, யுக்ரேய்ன் பிரதேசத்தின் மீதும் படையெடுத்துச் செல்லத் தீர்மானித்திருக்கிறார். யுக்ரெய்ன்மீது ஹிட்லருக்கு அதிக ஆவல். ஆனால், பக்கத்தில் பிரான்ஸ் இருப்பது ஹிட்லருக்கு ஒரு சனியன். பிரான்ஸ் ஒரு பலம் பொருந்திய நாடு; பிரான்சை எப்படியும் மடக்கவேண்டுமென்பது ஹிட்லரின் நோக்கம். அதற்கு முஸோலினியும், ஹிட்லருக்குப் பக்க பலமாக இருந்து வருகிறார். ஆகவே, பிரான்சை மடக்குவதில் ஹிட்லர் கவனஞ் செலுத்தி வருகிறார்.

ஐரோப்பாவுக்கு தலையிடி!! ஆப்பிரிக்காவில் ஆரம்பமாகலாம்

ஐரோப்பாவில், எந்த நிமிஷத்திலும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கலாம். ஐரோப்பிய தேசங்களெல்லாம் யுத்தகோலம் கொண்டிருக்கின்றன. ஆஸ்திரியா, ஜெக்கோ, ஸுடேடன், ரைன்லந்து முதலிய சிறு தேசங்களுக்கு ஏற்பட்ட கதி இன்னம் சில சிறு தேசங்களுக்கும் கிடைக்கலாம். ஐரோப்பாவில் மட்டுமல்ல; ஐரோப்பாவைப் பிடித்த தலைபிடி ஆப்பிரிக்காவிலும் பரவி வருகிறது. ஆகவே, மற்றொரு யுத்தம் வந்தால் அது ஐரோப்பாவுடன் நின்றுவிடாது; ஒரு உலக யுத்தமாக மாறுமென்பதில் சந்தேகமில்லை.



டுனிஸை எதிர்க்க, லிபியாவில் இதாலியர் தயாராக வைத்திருக்கும் இதாலிய ஒட்டகப் படை. இவர்கள் பெரும்பான்மையோர் லிபியா முஸ்லிம்கள்.

பிரஞ்சு முதன் மந்திரி டலாடியர். டுனிஸை இதாலிக்குக் கொடுக்க அடியோடு மறுத்து விட்டார். இவருடைய சர்க்கார், இதாலியை எதிர்க்க ஆப்ரிக்காவில் படை திரட்டுகின்றனர்.

டென்மார்க்குக்கு இடி!

ஜெர்மனி, பிரான்ஸ்மீது படையெடுத்துச் செல்லுவதாக இருந்தால், அது முதன் முதலில் ஜெர்மனிக்குச் சமீபத்திலுள்ள நாடுகளைத் தொலைத்தே தீரவேண்டும். சென்ற மகா யுத்தத்தில் பெல்ஜியம் என்ன பாடு பட்டது? அதே கதி தான், ஜெர்மனிக்கும், பிரான்சுக்கும் இடையிலுள்ள சிறு தேசங்களுக்கும் இனிமேல் ஏற்படப்போகிறது. ஸ்விட்சர்லந்து மீதும், டென்மார்க் மீதும் ஹிட்லர் கண்ணோட்டம் விழுந்திருப்பதாக இப்பொழுது செய்தி கிடைத்திருக்கிறது. டென்மார்க், அல்லது, ஸ்விட்சர்லந்துமீது ஹிட்லர் திடீரெனப் படையெடுத்து வரலாம். அப்படி அவர் படையெடுத்து வந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஜெர்மன் கடற் படை, விமானப் படை முதலியவைகளை வைத்துக் கொள்ள அது தகுந்த இடம். ஆனால் ஜெர்மனியை எதிர்க்கவோ டென்மார்க் தேசத்திற்கு போதிய ராணுவ பலம் கிடையாது. இளைத்த தேசங்களை அடித்துக் கொல்லுவதிலேயே சர்வாதிகாரிகள் முனைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வல்லரசுகளும் துணை இருக்கின்றன. ஸுடேடனைக் கேட்டதுபோல், ஹிட்லர், நாளைக்கு டென்மார்க் தேசத்தைக் கொடுக்கும்படி கேட்டால், பிரிட்டனும், பிரான்சும் அதற்குக்கூட இணங்கியே தீரும். அதற்காக ஹிட்லர் இப்பொழுதே ஏற்பாடு செய்ய ஆரம்பித்துவிட்டார்: டென்மார்க் தேசத்துக்கும், அதின்பின் ஸ்விட்சர்லந்துக்கும் தலையிடிதான்!



டுனிஸ் எல்லைப்புறத்தில் பிரஞ்சுக்காரர் அமைத்திருக்கும் கோட்டைகள் இக்கோட்டைகளில் பிரஞ்சு காலனிப்படைகள் எப்பொழுதும் யுத்தத்துக்குத் தயாராக இருக்கின்றன.



பிரஞ்சுக் காலனி படைகளில் ஒரு பகுதி. இந்தப் படைகளும் யுத்தத்துக்குத் தயாராக இருக்கின்றன. அவசியமானால் இப்படைகளைப் பிரஞ்சுக்காரர் ஐரோப்பிய யுத்தத்துக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

பிரான்ஸ் திண்டாட்டம்

பிரான்ஸ் தேசந்தான் ஜெர்மனிக்கும், இதாலிக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறது. அதற்கு

(அடுத்த பக்கம் பார்க்க)

யுத்தகோலம் !

(முன் பக்கத் தொடர்ச்சி)

நாலாபக்கமும் இடி.. ஸ்பெய்னை கலகக்காரர் ஜெயித்துவருவதால், ஸ்பெய்னிலிருந்து அதற்குப் பெரிய ஆபத்து வரலாம். ஹிட்லரும், முஸோலினியும் ஸ்பெய்னில் அவர்களுடைய ஆட்சியை நிலைநாட்ட வேலை செய்து வருகிறாகள். அவர்கள் அந்த ஆட்சியை நிலைநாட்டியே தீருவார்கள். ஜெனரல் பிராங்கோ, ஹிட்லர், முஸோலினியின் பொம்மையாகவே இருப்பார். இன்றேல், பிராங்கோவைக்கூட ஹிட்லரும், முஸோலினியையும் கவிழ்த்துவிடுவார்கள். ஆகவே, பிராங்கோ சர்வாதிகாரிகளின் சொற்படி ஆடியே தீரவேண்டும். இது பிரான்சுக்குப் பெரிய தலையிடி. ஸ்பெய்னிலிருந்து ஆபத்து வராமல் தடுக்கப் பிரஞ்சு சர்க்கார் ஒரு புது யோசனை போட்டிருக்கிறார்கள். ஸ்பெய்னுக்கும் பிரான்சுக்குமிடையில் ஒரு பெரிய கால்வாயை வெட்டி, மத்தியதரைக் கடலையும், அட்லாண்டிக் மகா சமுத்திரத்தையும் இணைத்துவிட ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். இத்திட்டத்தைப் பிரஞ்சு சர்க்கார் ஏற்கனவே, அதாவது, 1932ம் வருடத்திலேயே யோசித்திருந்தார்கள். ஆனால், அதற்கு அப்பொழுது அவசியமில்லாதிருந்ததால் அந்த யோசனையைக் கைவிட்டார்கள். ஆனால், இப்பொழுது அதற்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்பெய்னைக் கலகக்காரர் ஜெயித்து வருவதால், அந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரத் தீர்மானித்திருக்கிறார்கள். அந்த வேலையை பிரஞ்சு சர்க்கார் இன்றைக்கு ஆரம்பித்தால் 1942ம் வருடத்துக்குள் முடித்துவிடுவார்கள். சுமார் 10,000 ஜனங்களுக்கு வேலை கிடைக்கும். அந்தக் கால்வாய் வழியாக 40,000 டன் கப்பல்கள் கூடப் போகலாம். பிரான்சுக்குத் தற்போது இருப்பதுபோன்ற ஆபத்து இருக்காது. பிரஞ்சுக் காலனிகளிலிருந்து துருப்புகளை இலகுவில் கொண்டுவர முடியும். ஆனால், அதற்குள் பிரான்சுக்கு நிலைமையைச் சமாளிக்க முடியுமாவென்பது தான சந்தேகம்.

படை திரட்டுகின்றனர்

அடுத்த மே மாதம் வரையில் ஐரோப்பிய நிலைமையில் அவ்வளவு நெருக்கடி ஏற்படாது. ஆனால், மே மாதத்துக்குப்பின் ஐரோப்பிய நிலைமையைப்பற்றி நிச்சயமாக எதுவும் கூறுவதற்கில்லை. முஸோலினி டூனிஸ் பிரதேசத்தைக் கேட்கிறார். அதுவே அடுத்த யுத்தத்துக்குக் காரணமாக இருக்கலாம். அந்த யுத்தம் ஐரோப்பாவில் ஆரம்பிக்காது. ஆப்ரிக்காவில்தான் ஆரம்பிக்கும். ஆப்ரிக்காவில் ஆரம்பிக்கும் யுத்தம், மத்தியதரக் கடலுக்குப் பரவி, அங்கிருந்து அது ஐரோப்பாவுக்கு பரவியே தீரும். ஆப்ரிக்காவில், இதாலியும், பிரான்சும் படைகளை ஏராளமாகத் திரட்டுகின்றன. டூனிஸ் பிரதேசத்தைப் பாதுகாக்க பிரஞ்சு சர்க்கார் ஏராளமான ராணுவங்களையும், யுத்த தளவாடங்களையும் டூனிஸுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். பிரான்ஸின் எல்லைப்புறத்தில் கட்டியிருக்கும் மாயக்கோட்டைகளைப்போல் பிரஞ்சு சர்க்கார், டூனிஸ் எல்லைப்புறங்களிலும் கட்டியிருக்கிறார்கள். இதைக் கண்டு இதாலி சும்மா இருக்கவில்லை. லிபியாவெங்கும் இதாலியர் ஏராளமான யுத்ததளவாடங்களையும், ராணுவங்களையும் திரட்டி, யுத்தத்துக்குத் தயாராக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் ஜெர்மன் படைகளும், விமானங்களும், யுத்ததளவாடங்களுங்கூட லிபியாவுக்கும், பழைய ஜெர்மன் காலனிகளுக்கும் ரகசியமாகப் போய்க்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஐரோப்பிய தேசங்கள் படைதிரட்டுவதைப் பார்த்தால், அடுத்த ஒரு யுத்தம் தீவிரமாக நெருங்கி வந்துகொண்டிருப்பதாகவே கருதவேண்டியிருக்கிறது. ஆப்ரிக்காவில் முஸோலினியும், ஐரோப்பாவில் ஹிட்லரும் யுத்தத்துக்காக உறுமிக்கொண்டிருக்கிறார்கள். யுத்தம் வந்தால், அதனால் சர்வாதிகாரிகளுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கப்போவதில்லை. அவர்கள் சர்வாதிகார ஆட்சிக்கே அது வினையாக வந்து முடிந்தாலும் முடியலாம். என்றாலும், அவர்கள் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்காமல் முடியாது. யுத்த பயத்தைக் காட்டி அவர்கள் ஆயுள் காலத்தை நீடித்துக்கொண்டு போகிறார்கள். இவ்வாறு எத்தனை காலத்துக்குதான்! அவர்கள் பதவியை நீடித்துக்கொண்டுபோக முடியும்? அவர்கள் காலம் குறுகிவிட்டது. அதின் அறிகுறியாகவே மற்றொரு யுத்தம் ஆரம்பிக்கப்போகிறது.

சர்ம ரோகங்கள்

எக்ஸ்-மா

மருந்தால் குணமாகும்



புட்டி 1-க்கு
ரூ 1-0-0

சகல விதமான சர்ம ரோகங்களுக்கும் ஸ்பென்சரின் பேர்பெற்ற எக்ஸ்-மா மருந்தே பரம சஞ்சீவியாகும். கீழ்த் தேசங்கள் எங்கும் இந்த மருந்தை அறியாதவரில்லை. இந்த மருந்தை உபயோகித்த அநேகர் பூர்ண குணமடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தபாலிலும், தினசரி இந்தத் தைலத்துக்கு ஆர்டர்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. ஏராளமாக நாங்கள் விற்பனை செய்து வருவதிலிருந்தே இந்தத் தைலத்தின் அபூர்வ குணத்தை அறிந்து கொள்ளலாம். அது ஒன்றே இதற்குப் போதிய நற்சாட்சி பத்திரமாகும்.

"ஸ்மித்ஸ் அன் குவெண்டம் டேட்டர் ஜென்ஸ்" என்று இதற்கு ஆதியில் பெயர். இந்த மருந்து ஒன்றே சர்ம ரோகங்களுக்கு ஏற்ற தைலம்.

எக்ஸ்-மா:—சர்மத்தில் ஏற்பட்ட நோய்களுக்கு இதைப் பூசுவதால் எரிச்சல் இருக்காது.

உபயோகிக்கும் விதம்

நோய்ப்பட்ட இடத்தில் இந்தத் தைலத்தைக் காலையிலும், மாலையிலும் தடவி நன்றாகத் தேய்க்க வேண்டும். தேய்க்கும்போது காற்றுப்பட்டால் மிருதுவான கவரால் மூடிக்கொண்டால் நல்லது.

எக்ஸ்-மா மருந்தின் அபூர்வ குணங்களைப்பற்றி, ஒரு எல். எம். பி. டாக்டர். எமக்கு எழுதியிருக்கும் ஒரு நற்சாட்சிப் பத்திரத்தின் சாராம்சத்தைக் கீழே தருகிறோம்:—

அன்புள்ள ஐயா,

சென்ற 4 வருடகாலமாக என்னிடம் சிகிட்சைக்கு வரும் நோயாளிகளுக்கு நான் ஸ்பென்சர் கம்பெனியாருடைய "எக்ஸ்-மா" மருந்தையே சிபார்சு செய்து அதையே உபயோகிக்கும்படி செய்திருக்கிறேன். "எக்ஸ்-மா" நோய்களுக்கு அது கைகண்ட மருந்து; அபூர்வ குணம் அளிக்கிறது. இந்த மருந்தை பொது ஜனங்களுக்கு நான் மனப்பூர்வமாக சிபார்சு செய்கிறேன்.

இம்மருந்து ஸ்பென்சர் அண்டு கம்பெனியார் தயாரித்தது.
மொத்த வியாபாரிகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

ஸ்பென்சர் & கம்பெனி லிமிடெட்., மதராஸ்.

13-வது வாரம் : சென்னை ராயல் தியேட்டரில் : தினசரி ஒரே நாடகம்.

24-2-39 வெள்ளிக்கிழமை முதல் — செவ்வாய், வியாழன், சனி இரவு 9-30 க்கும், மற்ற நாட்களில் மாலை 5-30 க்கும்

ஸ்ரீ. கிருஷ்ணலீலா : இத்துடன் மயில் குடை டான்சுகள் நடைபெறுகின்றன.

மதுரை தேவி பால விநோத சங்கீத சபையார் — நவாப்-டி. எஸ். ராஜமாணிக்கம் புரொப்ரைட்டர்



ஒரு தீக்கோழி முட்டை, 24 கோழிமுட்டைகளின் நிறைக்குச் சமமாக இருக்கிறது. அளவிலும் அப்படியே. தீக்கோழி முட்டை ஓடுகளை நீக்ரோவர் தண்ணீர் சாப்பிடும் பாத்திரங்களாகக்கூட உபயோகித்து வருகிருர்கள். அந்த முட்டையின் ஓடு அவ்வளவு பலமுள்ளதாக இருக்கிறது.

* * *

இங்கிலாந்தில் எல். இ. பிளவர் என்னும் பெண்மணி ஒரு கானரிப் பறவையை வளர்த்து வருகிருள்; அந்தக் கானரி பாடுவதுமட்டுமல்ல; தெளிவாகவும் பேசுகிறது.

* * *

பறக்கும் மீன்கள் உண்மையில் பறப்பதில்லை. அவை வேகமாகப் பாய்ந்து செல்லுவது பறப்பது போலிருக்கும்.

* * *

கிரீன்வைல் என்னுமிடத்தில் ஒரு தனவந்தர் கருங்கற்களால் ஒரு வீடு ஒன்று அமைத்திருக்கிருர். அந்த வீட்டைக் கட்டி முடிக்க 50 தேசங்களிலிருந்து கருங்கற்களைக் கொண்டுவந்து அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடித்திருக்கிருர். பல தேசங்களிலிருந்து வந்த கருங்கற்கள் பலவகையான நிறங்களிலிருக்கின்றன. ஆகவே, கட்டிடமும் பல நிறங்களில் பார்வைக்கு அழகாகவிருக்கிறது.

* * *

சிலந்திப் பூச்சி, பூச்சி வகையைச் சேர்ந்ததல்லவென்று பூச்சிப் புழுக்கள் ஆராய்ச்சிக்காரர் கூறுகிருர்கள்.

* * *

அயர்லாந்தில் பிரபு வம்சத்தில் தோன்றிய ஒருவருக்கு பேய் பிசாசுகள் மட்டில் அதிக நம்பிக்கையுண்டு. அவர் வசித்து வரும் அரண்மனை பழைய காலத்து அரண்மனை. அந்த அரண்மனையில் ஆவி குடிகொண்டிருப்பதாக அவர் முன்னோர் கருதினர்கள். ஆகவே, 250 வருடங்களுக்கு முன்னிருந்தே அவர்கள் சாப்பிடும்போது, ஆவிக்கென தனிப் பிளேட்டில் ஆகாரங்களை வைத்துவிட்டு சாப்பிடுவது வழக்கம். அந்த வழக்கத்தை அந்தக் குடும்பத்தில் தோன்றிய கடைசி பிரபுவும் இன்றளவும் அனுஷ்டித்து வருகிருர். ஆனல், ஆவி அந்த ஆகாரத்தைச் சாப்பிட்டதும், சாப்பிடாததும் தெரியவில்லை. அந்த ஆவிக்கு ஆகாரம் வைக்கவில்லையேயானல், அன்றிரவு வீட்டில் ஒரே அமளிதானம்! ஆவியில் நம்பிக்கையுள்ளவர்கள் நம்பலாம்; நம்பிக்கை இல்லாதவர்கள் நம்பவேண்டாம்!

* * *

ஸ்டார்கிஸ் என்னுமிடத்தில் டானியல் பிரௌன் என்பார்வசித்து வருகிருர். அவருக்கு 8 பெண் மக்கள். அந்த 8 பெண் குழந்தைகளுக்கும் அவர் அழகான பெயர் வைத்திருக்கிருர். எடித், எர்வி, எவிவி, எல்வி, எலோய்ஸ், எவாடா, எலோடா, எலன் என்பவைகளே அந்தப் பெண் குழந்தைகளின் பெயர்கள்.

ஆப்ரிக்காவிலுள்ள வேட்டை எறும்புகள் ஒரு ஆற்றைக் கடக்க வேண்டியிருந்தால் அந்த எறும்புகள் கூடி இலைகளாலும், கொம்புகளாலும் ஒரு பாலங்கட்டுகின்றன. அந்த பாலத்தின் வழியாக ஆற்றைக் கடந்து செல்லுகின்றன. எறும்புகளுக்குக்கூட அவ்வளவு அறிவு இருக்கிறது!

* * *

தேனீக்களில் சுறுசுறுப்பாகத் தேன் சேகரிக்கும் ஈக்கள் யாவும் பெண் ஈக்களே. ஆனல் ஆண் தேனிக்கள் யாவும் முழுச் சோம்பேறி ஈக்கள்!

* * *

மெக்ஸிகோவில் குதிரைப் பந்தயப் பைத்தியம் அதிகம். ஆனல், அங்கு குதிரைகளில் ஜொக்கிகள் சவாரி செய்வதில்லை; குதிரைகளே ஓடி ஜெயிக்கின்றன.

* * *

லண்டனில், டப்ளியூ. ஆபட் என்பாருக்கிருப்பது போன்ற உரத்த குரல் யாருக்கும் கிடையாது. அவர் கூச்சலிட்டால் 7 மைல் தூரத்துக்குக் கேட்குமாம்!

* * *

தென் தீவுகளில் சில மரங்கள் தலை கீழாக வளருவதாக அங்கு ஆராய்ச்சி செய்யச் சென்றவர்கள் கூறுகிருர்கள்.

* * *

புரூக்லினில் பேர்பெற்ற ஒரு காபி வியாபாரி இருக்கிருர். அவர் பெயர் காபி!

* * *

லாஸ் ஏஞ்சல்ஸில் கண் நோய்க்குப் பேர்பெற்ற ஒரு டாக்டர் இருக்கிருர். அவர் பெயர் (பிளைண்ட்) குருடு!

* * *

பிலாடல்பியாவில் புஷ்ப வியாபாரஞ்செய்யும் ஒரு பெண்ணின் பெயர் லிலி ரோஸ்.

* * *

அமெரிக்காவிலிருக்கும் ஸ்நான அறைகளைவிட, அல்லது, டெலிபோன்களைவிட அங்கு அதிக மோட்டார்கார்களிருக்கின்றனவாம்! பல் தேய்க்கும் பிரஷைவிட அமெரிக்காவில் ஏராளமான மோட்டார் கார்களை உபயோகித்துவருகிருர்கள்.

* * *

30 அடி நீளமுள்ள பாம்புக்குச் சுமார் 600 விலா முள்கள் இருப்பதாகக் கூறுகிருர்கள்.

சென்னை, எ. கே. சந்திரசேகர முதலியார் எழுதிய,

ஹரிஜன சகாயம், விலை அணு. 0-2-0

ஹரிஜனங்களுக்கு காங்கிரஸ் செய்த :: :: :: :: நன்மைகளை விவரித்து எழுதியது.

காலஞ் சென்ற மந்திரி

ராமன் மேனன் ஜீவிய சரித்திரம் 0-2-0

சென்னை கார்ப்பொரேஷன் சரித்திரம் 0-2-0

எல்லா "தமிழ் மணி" ஏஜண்டுகளிடம் கிடைக்கும்.

T. Kuppuswamy Naidu,
OPTICIAN

120 & 121. Moor Market, Madras.
PLEASE PAY US A VISIT

இன்றே அபார தாதுபுஷ்டி

மதயானை

குளிகை

ஒருமணி நேரத்தில் அடக்கமுடியாத தாதுபுஷ்டியை உண்டாக்கிவிடுகிறது. இதன் வல்லமையை கண்டு தாது பலமிழந்த கிழவர்களும் வாலிபர்களும் ஆச்சரியப்படுவார்கள். உடைந்து நீற்றுப் போகும் இந்திரியத்தை கட்டி யானை பலம் உண்டாக்கும். இதன் ரகசியம் அனுபவித்து ஆனந்திக்கலாம்.

50 குளிகை ரூ. 5-0-0
சாம்பிள் 25 குளிகை ரூ. 3-0-0
கே. எஸ். பதி வைத்தியசாலை,
பழனி S. I.

சுதேசி கைத்தறி ஆடைகளை உபயோகியுங்கள்

எங்களுடைய ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க் 155ம் ரிஜிஸ்தர் டிரேட் நெம்பர்கள் 155, 300, 400, 480 & 600 நெம்பர்கள் உள்ள துவாலைகள் பெட்ஷீட்கள் பணியன்கள் ஷர்ட்டிங் & கோட்டிங்கள் மிகப்பிரசித்திபெற்றது. விவரங்களுக்கு எழுதவும்:—

சி. சாமிநாத முதலியார் & பிரதர்,

வீவிங் & நிட்டிங் பாக்டரி, கரூர்.

பிராஞ்சு:-தெற்குமாசி வீதி மதுரை. பெரிய பஜார் திருச்சி.
திண்டுகல் ரோடு கரூர். கமிஷன் மண்டி கரூர்.

உங்களுக்குத் தெரியுமா?

கலியுகக் குசேலன்!

அமெரிக்காவில் கோனு என்னும் ஊரில், ஜான் டி, ஸ்லோன் என்பார் வசித்துவருகிருர் இவருக்குப் பிள்ளை குட்டிகளுக்குப் பஞ்சமே இல்லை. அந்தக் காலத்தில் குசேலன் வசித்து வந்ததாகவும், அவருக்கு 27 பிள்ளை

கள் இருந்ததாகவும் ஒருகதை சொல்லுவார்கள். அந்தக் குசேலனையும் தோற்கடித்து விடுவார் ஜான் டி, ஸ்லோன் என்பார். இவருக்குத் தற்போது 34 குழந்தைகளிருக்கின்றன. இன்னமும் குறைந்தது அரை டஜன் குழந்தைகள் பெறலாமென்ற நம்பிக்கை அவருக்கு இருக்கிறது. அவருடைய அபிப்ராயமே அவருடைய மனைவிக்கும் இருக்கிறதாம்! இருவரும் கொடுத்து வைத்தவர்கள்; நிறைய பிள்ளைப் பாக்கியமிருக்கிறது. மறுபிறப்பு உண்டென்று சொல்லுகிருர்களல்லவா? இந்தியாவிலுள்ள குசேலனே இப்பொழுது அமெரிக்காவில் ஸ்லோனுகப் பிறந்திருக்கிருரோ என்னமோ தெரியவில்லை!

குடிகாரனுக்குப் பூட்டு!

அதிகம் பேசினல் வாய்க்குப் பூட்டு போட்டு விடுவதாகப் பலர் கூறுவதுண்டு. குடிகாரர்களுக்கு வாய்க்குப் பூட்டுப் போடுவது முடியாத காரியம். ஏனென்ருல், அவர்கள் வயிற்றை ஆப்ரேஷன் செய்தாவது, சாராயத்தை வயிற்றினுள் ஊற்றும்படி செய்துவிடுவார்கள்! இதைத் தடுக்கத்தான் போலும் அக்காலத்தில் இங்கிலாந்தில் ஒரு வழக்கத்தைக் கண்டு பிடித்திருந்தார்கள்.

குடிவெறி மிஞ்சி, வீதியில் குழப்பஞ் செய்யும் குடிகாரர்களுக்குத் தேகமெங்கும் படத்தில் காட்டியபடி பூட்டுப் போட்டு வந்தார்கள். இரும்புத் தகட்டால் செய்த பீப்பாய் போன்ற பூட்டை குடிகாரன் தேகத்தில் பூட்டிவிடுகிருர்கள். இதனுல், அவருக்குப் படுக்க இருக்கமுடியாது. குடித்தாலும் வீதியில் பீப்பாயோடு புரண்டு கொண்டு திரியவேண்டியதுதான். இந்தக் குடிகாரக் கோலத்தில் வெளிவரப் பயந்து பலர் குடியையே அடியோடு நிறுத்தி வந்தார்கள். ஆனுல், அந்த வழக்கம் இப்போதில்லை. இந்தக் காலத்திலகூட அந்த வழக்கத்தை அமுலுக்குக் கொண்டு வந்தால் நலமாயிருக்கும். மது விலக்கில் தீவிரமாக இருக்கும் காங்கிரஸ் மந்திரிகள் இந்தத் தண்டனையைப் பற்றி யோசித்து ஒரு முடிவு செய்வார்களா? யோசனை பலன் கொடுக்கலாம்; அத்தோடு அது நல்ல தமாஷாகவுமிருக்கும்.

தூங்கு மூஞ்சி!

நியூயார்க்கில், ரோச்செஸ்ட்டர் என்னுமிடத்தில் டப்ளியூ. எப். வெப் என்பார் ஒரு நத்தையை வளர்த்து வருகிருர். நத்தை மனிசருடன் பழகுவது வெகு அபூர்வம். ஆனுல், வெப் எப்படியோ ஒரு நத்தையை நன்ருகப் பழக்கி விட்டார். அந்த நத்தை அவர் போகுமிடங்களுக்குக் கூடவே



செல்லும். அவர் மேல் ஏறி விளையாடும். இதெல்லாம் 30 வருடங்களுக்கு முன். இப்பொழுது அந்த நத்தை ஒரே தூக்கம் தூங்கிக்கொண்டிருக்கிறது. அது தூங்க ஆரம்பித்து 30 வருடங்களாகின்றன. இன்னமும் அதற்கு விழிப்பில்லை. செத்துவிட்டதோவென்று கேட்கலாம்; சாகவுமில்லை. இன்னமும் உயிருடனிருக்கிறது. அது ஒரு தூங்குமூஞ்சி நத்தைபோலும்!

எலும்பு உண்டா?

மிருகங்களில் நன்ருகக் கொழுத்திருப்பனவற்றுள் பன்றியும் ஒன்று. பன்றிகளுக்குத் தேகத்தில் எலும்பைக் காணுவதே அபூர்வம். ஆகவே,

பன்றிகளுக்கு எலும்பு அதிகக் குறைவு என சிலர் நினைக்கிருர்களாம். உண்மையில் பன்றிகளுக்குத்தான் எலும்புகள் அதிகம். எந்த மிருகத்தையும் விட பன்றிகளுக்கு 79 எலும்புகள் அதிகமிருப்பதாக மிருக ஆராய்ச்சிக்காரர் கூறுகிருர்கள். பன்றிகளை இலகுவில் அடித்துக் கொல்லமுடியாது. அவைகளுக்கு அதிக எலும்புகள் இருப்பது இதற்குக் காரணமாக இருக்குமா? மிருக ஆராய்ச்சிக்காரர் இதைப்பற்றிக் குறிப்பிடாதது வருந்தத தக்கதே.

இழவுக்கும் வேடிக்கை!

பட்டாஸ், வாண வெடிகளை ஆதியில் கண்டுபிடித்தவர்கள் சீனர்கள். இன்றளவும் சீனுவிலிருந்து ஏராளமான பட்டாஸ் வெடிகள் வருகின்றன. இந்த வாண வெடிகளைச் சீனர் உற்சவகாலத்திற்கு மட்டும் உபயோகிப்பதில்லை. கலியாணங்களிலும், ராணுவப் பவனி காலங்களிலும், இழவுக்குங்கூட உபயோகித்து வருகிருர்கள். சீனருக்கு கலியாணம், இழவு எல்லாம் ஒன்றுதான் போலும்!

கஷ்டமே! நீ சுகமாய் போய்வா! அசக்தியே! உனக்கும் வந்தனம்! நீயும் போகலாம்.

எங்களது உலகப் பிரசித்திபெற்ற
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை
உபயோகித்து வந்தால் தேகம் பலத்தையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையுமடைந்து வஜ்ர சரீரமாகும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரு. 1—0—0
இனும்! போஜன விதிகள் இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம், 26 பிராட்வே, மதருஸ்.
ஏஜண்டு:—
T. N. சோக்கலிங்கம் பிள்ளை, 17, வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

இழுப்பு இருமலுக்கு ஸ்டாக்ஸ்:—
சுவாசகாச நிவாரணி
கைகண்ட ஔஷதம்
எங்கும் கிடைக்கும்.
ஜீ. எஸ். ஸ்டியார்ஸ் கம்பெனி'
12, எர்ரபாலு செட்டி வீதி, மதராஸ்.

M. A. CHARI & Co.,
Ophthalmic Opticians,
9-9, BROADWAY, MADRAS.

மாதங்கள் வேண்டாம் நாட்களும் வேண்டாம்;
ஒரே ஒரு மணி நேரத்தில்
வீரிய ஸ்தம்பனம் ஏற்பட
ரமண விலாசினி வடிகா
உபயோகியுங்கள்.
ஒரு டப்பி விலை ரூபா 1—0—0
மதனமஞ்சரி பார்மஸி, 1-94, சைனுபஜார், மதராஸ்.

விலை ரூபா 1-0-0

சுற்றெல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

இந்திரா



பல வருஷங்கள் உழைக்கக் கூடியது
இன்று இணையற்று விளங்குவது வெகுநாள் உழைக்கக் கூடியது
சரியான மணி காட்டும். 8 நாளைக்கு ஒரு முறை சாவி கொடுக்கக் கூடியது. பெண்டுலம் மூவ்மெண்ட்; எனமல் டையல். மணி, அரை மணி இனிமையான தொனியில் அடிக்கக்கூடியது.
8 டயல் ரூ. 15
10 ,, ரூ. 20
12 ,, ரூ. 25
10 வருடப் உத்திரவாதம்
ஜலால் அண்டு சன்ஸ்,
கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்,
46, ரட்டன் பஜார் சென்னை.
—: பிரஞ்சு :—
மவுண்ட்ரோட் சென்னை.
ஆபிட்ரோட் ஹைதராபாத், டெக்கான்.

ஏஜண்டுகள் தேவை

டீ இனங்கள் எவ்வளவு உயரத்தில் உற்பத்தி ஆகிறதோ அவ்வளவுக்கும் மணம், குணம், நிறைந்து இருக்கும். அசாம் தேசத்திலும், மைசூர், திருவாங்கூர் முதலிய இடங்களில் உற்பத்தியாகும் தேயிலைகள் சமுத்திர மட்டத்திற்கு 3000 முதல் 4000 அடி வரையில் தான் உற்பத்தியாகின்றன. ஆனுல், எங்கள் எஸ்டேட் பலரக தேயிலைகள் சமுத்திர மட்டத்துக்கு 7000 முதல் 7500 அடி உயரத்தில் உற்பத்தியானபடியால், மற்ற எல்லா பேர்வாய்ந்த தேயிலைகளைவிட மேலானது என்பதற்கு சந்தேகமில்லை. இதை வாங்கி அனுபவித்தவர்களுக்கே இதன்பெருமை தெரியவரும். 25 முதல் 50 ராத்தலும் அதற்குமேல் தனித்தனி நபருக்கு வேண்டுமானுலும் சப்ளை செய்யப்படும்.
விபரங்களுக்கு:—
ஆல் இந்தியா டிரேடிங் கம்பெனி, 17-20, வி. வி. கோவில் தெரு, பெரியமெட், சென்னை.

டாக்டர். எம். பி. ஜீ. ராஜன், L. D. Sc.
பல் வைத்தியர்
ஆபீஸ்: 286, சைனு பஜார் மதராஸ்.
(அப்பா பில்டிங் மாடியில்)
காலை 8-30 மணி முதல் மாலை 7-மணி வரையில் திறந்திருக்கும்.

எல்லா விதமான பல் வியாதிகளைநீக்கவும், சுத்தப் படுத்தவும்; பல் கட்டும் வகையரு வேலைகள் வெகு சரசமாகச் செய்யப்படும்.
பவேரியா பல் மருந்து விலை ரூ. 1-0-0
பல்பொடி அணு. 0-6-0

ஆப்ரேஷன் தேவையில்லை

தொண்டையிலும்,
நாசித்துவாரங்களிலும்
சதை வளர்ந்தால்

“டான்ஸ்லிட்”

அற்புதமாய்க்
குணப்படுத்தும்

இந்த அருமையான மருந்து பயோலாஜிகள் முறைப்படி கண்டு பிடிக்கப்பட்டது.

இதன் பெருமையை அதிகமாக விவரித்து எழுதுவதை நிறுத்திச் சுருக்கிக் காட்டுகிறோம். தற்காலத்தில் தொண்டையில் உள்நாக்கின் இரு பக்கங்களிலும், நாசித்துவாரங்களிலும் சதை வளர்ந்து சுவாஸ அடைப்பை உண்டாக்கும் உபத்திரவங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் சகஜமாயிருக்கின்றது. இந்த வியாதிகளை “டான்ஸ்லிட்” அபூர்வமாகக் குணப்படுத்தும். நிற்க இந்த பரம ஔஷதம் சாப்பிட ஆரம்பித்தவுடன் ஜளிப்பு, இருமல், அடிக்கடி உண்டாகும் காச்சல் முதலியவைகளையும் போக்கி, அபரிமிதமான பசி தீபவனத்தை பெருக்கி, தேகத்தைப் புஷ்டியாக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தராக முதலில் ஒரு பாட்டல் வாங்கியுண்டால் இவற்றின் அபார குணம் நன்கு விளங்கும். இல்லையேல் எமக்கு தெரிவித்தால் விபரங்களும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் அனுப்ப சித்தமாயிருக்கிறோம்.

விவரங்களுக்கு:— **ஆலன்கிலினிக்,** இராயப்பேட்டை, மதராஸ்.

ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்கள் வியாதி எதுவானாலும், எவ்வளவு நாட்பட்டதாயினும், எத்தனையோ வைத்தியர்களிடம் மருந்து சாப்பிட்டும், ஊசிகள் போட்டும், குணமாகாதிருந்தபோதிலும், கவலை கொள்ளாமல் எமது மருந்தை ஒருமுறை சாப்பிட்டுப்பாருங்கள்! குணம் அடைவீர்கள். திமிர், குஷ்டம், பத்து, தடிப்பு, மதமதப்பு, ஊரல், அரிப்பு, குழிப்புண், திரேகத்தில் வட்டமாயுள்ள செம்மேகம், கிரந்தி காசம், க்ஷயம், இருமல், இளைப்பு, வாதம், நீரிழிவு, வெள்ளை, வெட்டை, விரைவாய்வு, சூதகவாய்வு, இடுப்பு வலி, முதலியவைகளால் கஷ்டப்படுகிறவர்களும் இதர வியாதியஸ்தர்களும் நேரில் வந்து சிகிச்சை பெறலாம்.

சியாட்லாக் இனாம்.

பலையப்பசாமி வைத்தியசாலை,
1.54, அருணாசல நாய்க்கன் தெரு,
சிந்தாதரிப்பேட்டை, சென்னை.



நூதன முறையில் தயாரித்த எமது ஜெர்மன் **கேமரா**

இக் கேமரா வெகு நேர்த்தியுடன் கைப்பிடி அளவில் தயாரித்தது. இது சிறுவர்கள், சிறுமிகள் முதல் யாதொரு ஒழுங்குப்பாடுமின்றி குறித்த இடத்தில் கூடிய சீக்கிரத்தில் உருவங்கள் தயாரிக்கலாம். நீண்டகாலம் உழைப்புள்ளது. படம் அளவு 3¼”x2½”
இதன் விலை (8 பிலிம் ரோலுடன்) ரூ. 5-8-0
தனியே 8 பிலிம் ரோலுக்கு 1-4-0
தபால் சிலவு தனி. முன் பணம் ரூ. 5-8-0 அனுப்புவோருக்கு தபால் சிலவு இனாம்.

பக்தா & கம்பெனி, 1-24, ஆயலூர் முத்தைய்யா முதலி தெரு, சென்னை.

ஜண்டுவின் பேர் பெற்ற மருந்துகள்

கை கண்ட பலன் தரக்கூடியவை
வெவ்வொரு வீடுகளிலும் அவசியம் இருக்கத்தக்கவை

1. ஜண்டு மலேரியா மிக்ஸ்சர்

மலேரியா முதலிய விஷஜுரங்களுக்குக் கை கண்ட மருந்து
புட்டி 1-க்கு அணா. 0-13-0

2. ஜண்டு பாலாம்ருதம்

மெலிந்து, ஆரோக்யமிழந்த சிறு குழந்தைகளுக்குத் தேவாமிர்தம் போன்றது.
புட்டி 1-க்கு அணா. 0-10-0

8. ஜண்டு கிரைபினல்

வயிற்று நோய், வயிற்று வலி, சீத பேதி, அஜீரணம் முதலிய நோய்களால் அவதிப்படும் சிறு குழந்தைகளுக்கு இம்மருந்து உடனே குணங்கொடுக்கும்.

விலை புட்டி 1-க்கு அணா. 0-12-0

ஜண்டு மருந்துகள் எல்லா முக்கியமான
மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

மொத்த வியாபாரிகள் கீழ்க்கண்ட சோல் ஏஜண்டுக்கு எழுதி விபரந்தெரிந்துகொள்ளவும்:—

Damoder & Co, 78, China Bazaar Road, Madras

Rg. No. 3379

ரிஜே விஜிடபிள் டானிக் ஸிரப்

சிறந்த ரத்த புஷ்டியை உண்டாக்கும்
டாக்டர்கள் இதை பெருமையாய் புகழ்ந்து அனேகருக்கு சிபார்சு செய்கிறார்கள். சாம்பில் வேண்டுவோர் 0—2—0 ஸ்டாம்பு அனுப்பினால் உடனே அனுப்பப்படும்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.
சி எப் அண்டு சன்ஸ் 503, தங்கசாலைத் தெரு, சென்னை.

G. கன்னையா கம்பெனி



இரும்புப்பெட்டிவியாபாரம்
கவர்ன்மெண்டு
ரயில்வே, பாங்கு
கொவாபரேடிவ்சொஸைடி
வியாபாரிகளுக்கும்,சப்ளையர்கள்

137, பிராட்வே, மதராஸ்

ஆச்சரியமான ஔஷதம்

24 மணி நேரத்தில் வெள்ளைட்டும் எரிச்சலும் நின்றுவிடும். கெடியாரம் வைத்துப் பரிக்ஷிக்கவும்.

குணமில்லாவிடில் ரூபாய் வாபீஸ்

ஸ்ரீ. சத்திய நாராயண மாத்திரை

இம்மகா மகத்துவம் பொருந்திய மாத்திரையை, காலை மாலை சாப்பிட்டால் வெள்ளை என்னும் கொடிய ரோகம் அடியோடு ஒழிந்துவிடும். சில மருந்துகள் அப்பொழுது மாத்திரம் வியாதியை கண்டித்து பிறகு வந்துவிடும். அதனால் தளர்ந்த வயதில் பலவிதமான மேக வியாதிகள் உற்பத்தியாகி கஷ்டப்பட்டிருக்கிறார்கள் என்று யாவருக்கும் தெரிந்த விஷயம். இம்மருந்தை சாப்பிட்டால் ஆயுள் பரியந்தம் அந்த வியாதி தலை காட்டாது, நல்ல காலம் உள்ளவர்கள் இதை உடனே வாங்கி பரிக்ஷிப்பார்கள். அநேக படாடோப ஔஷதங்களை சாப்பிட்டு ஏமாந்தவர்களுக்கு சந்தேகமாகத்தான் இருக்கும். வியாதி உள்ளவர்கள் எந்த மருந்தும் சாப்பிடாமல் இதை உடனே வாங்கி சாப்பிட்டு உங்கள் கவலையை ஒழியுங்கள். பொய்யல்ல. உண்மை. ஆண் பெண் இருவரும் சாப்பிடலாம்.

10-நாள் சாப்பிடக்கூடிய மாதிரி புட்டி விலை ரூ. 1-4-0   20-நாள் சாப்பிடக்கூடிய பெரிய புட்டி விலை ரூ. 2-0-0

பினங்கு, சிங்கப்பூர் வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவும்.

எமது விலாசம்:— **A. S. வைத்தியசாலை,** 8-வது பீட்டு, வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

இந்தியா
தனிப்பிரதி
விலை அரையணா
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா 2-8-0.
இலங்கையில்
தனிப்பிரதி சதம் 5
ஆறு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

தமிழ் மணி

பர்மா, மலாய்
தனிப்பிரதி 0-1-3.
வருட சந்தா
ரூ. 4—0—0
ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தாவுக்குப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

ஏழை என்றும் அடிமை யென்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே

என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?—பாரதி

சொற்பப் பிரதிகளே இருக்கின்றன உடனே முந்துங்கள்

"தமிழ் மணி" ஆசிரியர் எழுதிய

சொக்கநாதன் அல்லது
ரங்கன் திருவிளையாடல்

காதல், சோகம், ஹாஸ்யம், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த முதல்தரமான துப்பறியும் நாவல்

●

விலை 12 அணா.

● ● ●

முன் பணமாக அனுப்பவும்.
வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.
இந்தியாவுக்கு தபால், செலவு உள்பட, ரூ. 1-0-0

பர்மா, மலாய் முதலிய அந்நிய நாடுகளுக்கு தபால் செலவு உள்பட ரூ. 1-2-0

மானேஜர்:- "தமிழ் மணி" ஜி. டி. மதராஸ்.

Edited, Printed and Published by, P. ALBIN at the "TAMIL MANI" Press. 21, Sembudoss St., G. T. Madras.